Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–10 | 25–07–2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை –158


உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
(சி-9954)
விநாயகர் வீதி, மயிலிட்டி.

# சமாதான முன்னெடுப்புக்களில் ஏற்படும் தடங்கல்

# இலங்கையில் மீண்டும் போரை ஏற்படுத்தலாம்

## நெருப்புடன் சிலர் விளையாடுவதாகவும் நோர்வே எச்சரிக்கை



**சமாதான முனைப்புக்களின் தடங்கல் நிலை போர் நிறுத்தத்தை சிதறடித்து மீண்டும் இலங்கையில் உள்நாட்டுப் போரை ஏற்படுத்தலாம் என நோர்வே எச்சரித்துள்ளது. இலங்கையில் சிலர் நெருப்புடன் விளையாடுகின்றனர். இது நாட்டை பாரிய பின்விளைவுக்கு கொண்டு செல்லக்கூடிய செயலாகும் என நோர்வேயின் பிரதி வெளியுறவுத்துறைஅமைச்சர் விதார் ஹெல்கேசன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவரின் செவ்வியை ரொய்ட்டர் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ளது.

அண்மைக் காலமாக இலங்கையில் இடம்பெற்ற சம்பவங்கள் தமக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறியுள்ள விதார் ஹெல்கேசன், கருணாவின் விடயம் தொடர்பில் நேரடியான கருத்து எதனையும் தெரிவிக்க மறுத்துள்ளார். என்றாலும் அந்த விடயத்தில் அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் என்ன தீர்வை மேற்கொள்ளலாம் என்பதை அறிந்திருப்பதை தாம் உணர்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்

அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய வகையில் மதித்து நடக்காவிட்டால்,சமாதான முனைப்புகளை ஆரம்பிப்பது கடினமாகிவிடும். இரண்டு தரப்புகளும் உயர் மட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெலிக்கடை தியாகிகள் தினம் இன்று திருமலையில் அனுஷ்டிக்க ஏற்பாடு

வெலிக்கடை தியாகிகள் நினைவு தினத்தை திருமலை மக்களும், மக்கள் பேரவையும் தமிழீழ விடுதலை இயக்கமும் இன்று உணர்வு பூர்வமாக நடத்துவதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொண்டு வருவதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொள்ளவுள்ளதாகவும், சிறப்பு அதிதியாக தமிழீழ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனும் கலந்து கொள்ளவுள்ளதாக தமிழ் மக்கள் பேரவை விடுத்துள்ள பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விசர்நாய்க்கடி தடுப்பு மருந்து தீர்ந்தது விலங்குவிசர் நோய் பரவும் அபாயம்

யாழ்மாவட்டம், வவுனியா மாவடம் என்பவற்றில் விசர் நாய்க்கடிக்குரிய விசர்நாய்கடி தடுப்பு மருந்துக்கள் தீர்ந்துள்ளன. யாழ்மாவட்டத்தில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, வடமராட்சி, தென்மராட்சியில் உள்ளவிசர்நாய்க்கடித்தடுப்பு ஊசி பெறுகின்ற நோயாளிகள் கடந்த 3 நாட்களாகக் கிளிநொச்சிக்கு வந்து ஊசி போடுகின்றனர். இதனால் கிளிநொச்சியிலும் ஊசி மருந்து தீர்ந்து போகும்அபாயம் தோன்றியுள்ளது. இதற்கிடையில் கிளிநொச்சியில் அண்மைக்காலமாக கட்டாக்காலி நாய்களின் கடிக்கு இலக்கானவர் தொகை அதிகரித்துள்ளது. இவர்களிற்கு உடன் போடுகின்ற ஏ.ஆர்.எஸ். வக்சீன் இல்லாததால் நோயாளிகள் வவுனியாவிற்கு மாற்றப்படுகின்றனர். இதனிடையே நேற்று முல்லைத்தீவில் சிறுமியொருவர் விசர்நாய்க்கடிக்கு உட்பட்டு மரணமடைந்துள்ளார்.

கட்டாக்காலி நாய்களை விரைவாக அழிக்கும் திட்டம் சரியாக அமுல்படுத்தப்படாதவரை நாய்க்கடியை கட்டுப்பாட்டிற்குக்கொண்டுவர முடியாதென கிளிநொச்சி மருத்துவர் சங்கம் உணர்கிறது.

## ஹெல்கேசன்-தமிழ்ச்செல்வன் நாளை சந்தித்துப் பேசுவர்

(அலுவலக செய்தியாளர்)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார்ஹெல்கேசன் உட்பட்ட குழுவினர் நாளைய தினம் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அவர்களைச் சந்தித்துப் பேசவுள்ளனர்.

நாளை காலை கிளிநொச்சியில் நடைபெறவுள்ள இச்சந்திப்பின் போது தற்போது பேச்சுவார்த்தையில் ஏற்பட்டுள்ள தேக்க நிலை

(12 ஆம் பக்கம் பார்க்க)

### மக்கள் பீதி

(வவுனியா)

வவுனியாவில்-நேற்று இராணுவத்தினர்மேற்கொண்ட பயிற்சியால் மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

நண்பகல் 12.00 மணி யளவில் மாமடு இராணுவ முகாமில் பயிற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் பாரிய குண்டுகளைத் தொடர்ச்சியாக வெடிக்க வைத்தமையாலேயே மக்கள் பெரும் பீதியடைந்த

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வெல்லாவெளியில் இளைஞர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை

வெல்லாவெளிப்பிரதேசத்தில் மண்டூர் எனும் இடத்தைச் சேர்ந்த அழகையா இன்பராசா (20) என்பவர் இனந்தெரியாதோரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.கடந்த நேற்று முன்தினம் இரவு இவரது வீட்டுக்குச்சென்ற இனந்தெரியாத ஆயுததாரிகள் இவரை வெளியில் அழைத்துக்கொண்டு சென்று துப்பாக்கிப்பிரயோகம் செய்துவிட்டுத்தப்பிச சென்றுள்ளனர் .வெல்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்முனை பாண்டிருப்பில் இளைஞனின் சடலம் மீட்பு

(மட்டக்களப்பு)

கல்முனை பாண்டிருப்பில் நடைபெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் கொல்லப்பட்டவர் 25 வயதுடைய சிதம்பரப்பிள்ளை- துஷ்யந்தன் என அடையாளம் காணப்பட்டுள்ளது. இவரது வாயிற்குள்ளேயே துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இவர் கல்முனை கட்டடத் திணைக்களத்தில் தற்காலிக ஊழியராக பணியாற்றுகின்றவர் எனவும் இவர் விடுதியில் தனியாக தங்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கறுப்பு யூலை தினமான இன்று துக்கதினமாக அனுஷ்டிக்குக

### மன்னார் பொது அமைப்புக்கள் கோரிக்கை

கறுப்பு யூலை தினத்தைத் துக்க தினமாக அனுஷ்டிக்க மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

தமிழ்த்தேசிய இனத்தின் சுபீட்சகரமான வாழ்வில் 1948 ஆம் ஆண்டு மாசித் திங்கள் 4 ஆம் நாளில் இருந்து தமிழ் தேசியத்தையும் இனத்தையும் திட்டமிட்டுக் கூறுபோட்டு அழித்துவந்த தென்னிலங்கை அரசியல்வாதிகளின் செயற்பாட்டின் மூலம் தமிழர்களின் உரிமைகளையும்,உயிரையும் பறித்து அழித்து வந்ததன் மூலம் எம்மைப் பயமுறுத்தி பல இன்னல்களை ஏற்படுத்தி வந்தவர்களின் வெளிப்பாடே கறுப்புயூலையாகும்.

கறுப்பு யூலைக்கலவரமானது எத்தகைய கலவரங்கள் வந்த போதும் தனித்து நிற்கும் எமது தேசியத்தின் உரிமைகளை வென்றெடுக்கும் அனைத்து மக்களும் ஒன்று பட்டுள்ளோம் என்பதைத் தென்னிலங்கைச் சமூகத்திற்கும் எடுத்துக் காட்டாக இன்று துக்கமாகக் கடைப்பிடிப்பதுடன் எமது அன்றாட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இருதரப்புக் கீழ்மட்ட உறுப்பினர்களும் யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பது அவசியம்

### வன்னிக்கான இராணுவக்கட்டளைத்தளபதி

நடைமுறையில் இருக்கும் போர் நிறுத்த உடன்பாட்டில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையும், அரசாங்கத்தின் தலைமையும் கைசாத்திட்டுள்ளன.

இந்த நிலையில் இருதரப்பிலும் இருக்கும் கீழ் மட்ட உறுப்பினர்கள் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டியது தற்போதைய சூழ்நிலையில் முக்கியமானதாகும் என வன்னிக்கான சிறிலங்கா இராணுவக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய தெரிவித்துள்ளார்

நேற்று வவுனியாவில் ஊடகவியலா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிற்குள் உள்நுழைய ஈழவேந்தன் பா.உ.க்கு தடை

### கொழும்பிற்குத் திருப்பி அனுப்பப்பட்டார்

இன்று பெங்களூரில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழர் மாநாட்டில் பங்கேற்பதற்காக இலங்கையிலிருந்து சென்னை விமான நிலையம் சென்றடைந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் மா. கா. ஈழவேந்தனுக்கு இந்தியாவிற்குள் நுழைய அனுமதி மறுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக பி.பி.சி தெரிவிக்கையில நேற்று மாலை 3.30 மணிக்கு இந்தியா வந்து சேர்ந்த அவரை நகரின் உள்ளே நுழைய விடாது இந்திய நேரப்படி 9.00 மணிக்கு திருப்பி அனுப்பியுள்ளதாக தெரிவித்தது. இது தொடர்பாக அங்குள்ள அதிகாரி கூறுகையில் தங்களுடைய உத்தரவு அவ்வளவுதான்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜெய்ப்பூர் புனர்வாழ்வு நிறுவன ஆண்டு விழாவையொட்டி விளையாட்டு

(வடமராட்சி)

சிறிலங்கா இராணுவத்தினால் யுத்த நடவடிக்கைகளில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளில் சிக்கி அங்கவீனமுற்ற பொதுமக்களுக்கான விளையாட்டு விழா நேற்று யாழ். நகரில் இடம்பெற்றன.

அங்கவீனமுற்றவர்களுக்கான செயற்கைஅவயவங்களை பொருத்தி வழங்கும் ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 17ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இப் போட்டிகள் இடம்பெற்றிருந்தன.

ஜெய்ப்பூர் நிறுவனத்தின் செயற்திட்டப்பணிப்பாளரும், முகாமைத்துவக்குழுத் தலைவியுமான திருமதி.தி. யோகநாதன் தலைமையில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

பிரதம விருந்தினராக இலங்கைக்கான யு.எஸ்.எய்ட் மிசனின் பணிப்பாளர் கலாநிதி திருமதி கரல் பேக்கரும், கௌரவ விருந்தினராக " மோட்டிவேசன் அறக்கொடை நிதியத்தின் (இலங்கை) உதவிப்பணிப்பாளர் திருமதி. இராணி சாமுவேல் அவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

முன்னதாக காலை நேர நிகழ்வுகள் ஜெய்ப்பூர் நிறுவனம் அமைந்துள்ள சுண்டுக்குளிப் பகுதியில் 'இடம்பெற்றது. அங்கவீனமுற்ற ஆண் வீரர்கள் மற்றும் பெண் வீராங்கனைகள் பங்குபற்றிய சைக்கிள் ஓட்டப்போட்டி மற்றும் முச்சக்கரவண்டி ஓட்டப் போட்டிகள் இடம்பெற்றன.

மாலை நேர தடகளப் போட்டிகள் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்திலும் இடம்பெற்றன. போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசில்கள் நிகழ்வின் இறுதியில் வழங்கப்பட்டன. (27)





நேற்று முன்தினம் நல்லூரில் நடைபெற்ற லெப்.செல்லக்கிளி அவர்களின் நினைவு நிகழ்வில் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி அவர்கள் தேசியக்கொடியை ஏற்றிவைப்பதையும் வன்னி மாவட்ட பா.உ. வும் செல்லக்கிளி அவர்களின் சகோதரருமாகிய கனகரட்ணம் அவர்கள் மலர்மாலை அணிவிப்பதையும் படங்களில் காணலாம்.

# தியாகதீபம் திலீபன் நினைவாக விநாயகபுரத்தில் அறிவகம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி விநாயகபுரத்தில் மாணவர்களின் கல்வித்திறனை மேலும் ஊக்குவிக்கும் பொருட்டு மாலைநேர வகுப்புக்களை நடாத்துவதற்காக தியாக தீபம் திலீபன் நினைவாக அறிவகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

புலம் பெயர்ந்து லண்டனில் வசிக்கும் இலங்கைத்தமிழரான குலத்துங்கம் அவர்களின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இவ்





அறிவகக் கட்டடத்தின் திறப்புவிழா நேற்று மாலை 4.30 மணிக்கு விநாயகபுர ஊரக வளர்ச்சிப்பணித்தலைவர் அலெக்ஸ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பொதுச்சுடரினை கிராம உத்தியோகத்தர்

வைரவநாதன், மானிட விழுதுகள் அபிவிருத்தி அமைப்பின் செயலாளர் க.சுமதி ஆகியோர் ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ ஊரக வளர்ச்சிப் பணிப் பொறுப்பாளர் அன்பரசன் ஏற்றினார்.அறிவக மண்டபத்தினை குலத்துங்கம் அவர்கள் திறந்து வைக்க சிறப்புரைகளை கிராம உத்தியோகத்தரும், குலத்துங்கம் அவர்களும் நிகழ்த்தினர். இந்நிகழ்வில் பாடசாலைமாணவர்கள், பொதுமக்கள், தனியார் நிறுவனப்பணியாளர்கள் என பலரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்(ச).

## சேவை நலன்பாராட்டு

ஓய்வு பெற்ற பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு. கந்தையா - சரவணபவன் அவர்களுக்கு அவர்களிடம் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பாட நெறியை பயிலும் மாணவர்கள் தமது "சேவை நலன் பாராட்டுதலை" தெரிவித்துக்கொள்கின்றார்கள்.

**"கல்வியில் கலங்கரை விளக்கமாய்**
**கறையற்ற ஆளுமையின் பிறப்பிடமாய்**
**ஓய்வு பெற்ற பின்பும் உம்சேவை தொடர்ந்திட**
**மனதார வாழ்த்துகின்றோம்."**

**-பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர்கள்.**

(சி-9151)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் குமாரவேலு தர்மலிங்கம்**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செல்லையா தயானந்தா அவர்களின் மாமனாரான **அமரர் குமாரவேலு தர்மலிங்கம்** அவர்களின் 31ஆம் நாள் நினைவலைகளில் நாமும் பங்குகொள்கிறோம்.

**மனிதவள அலுவலர் - த. ஈசன்**
**வர்த்தக சங்கத்தலைவர் பொ.சிவரஞ்சன்.**

(சி-9167)

## கால்நடைகளைப் பெற்றுக்கொள்க

பயிரழிவினால் பிடிக்கப்பட்டு எம்மிடம் உள்ள மாடுகளை 02.08.2004இற்கு முன் பெற்றுகொள்க. தவறும் பட்சத்தில் பகிரங்க விற்பனைக்கு விடப்படும்.

| நிறம் | இனம் | குறி |
|---|---|---|
| வெள்ளை | பசு | K.S |
| கறுப்பு | பசு | K.S |
| கறுப்பு | நாகுகன்று | - |
| வெள்ளை | பசு | K.P.T.H |

**இணைப்பாளர்**
**த.பொ.நி.**
**விசுவமடுப்**
**பிரதேசம்**

(சி-9760)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

**அமரர் குமாரவேலு தர்மலிங்கம்**

புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் திரு. செல்லையா தயானந்தா அவர்களின் மாமனாரான அமரர் குமாரவேலு தர்மலிங்கம் அவர்களின் 31ஆம் நாள் நினைவலைகளில் நாமும் பங்குகொள்கிறோம்.

**குரவீல்,**
**உடையார்கட்டு தெற்கு.**

**தேசிய எழுச்சிப் பேரவை,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**சனசமூக நிலையம்,**
**ஆலய நிர்வாகம், பொதுமக்கள்.**

(சி-9168)


வன்னிப்பெருநிலப்பரப்பில் உந்துருளி விற்பனையில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

உங்கள் சிறந்த தெரிவுகளுக்கு எமது காட்சியறைக்கு வாருங்கள்




**சிவகுரு கட்டடப்பொருள் உந்துருளி வாணிபம்**

FX - சாம்
F2 XL சுப்பர்
விக்ரர் மெக்ஸ்கன்றட்
ஸ்கூட்டர் XL சுப்பர் (கெவி டியூட்டி)

**இல. 496,496/1**
**நாயகி கட்டடம்,**
**யாழ்சாலை பரந்தன்,**
**கிளிநொச்சி.**

இவையுடன் TVS ன் புதியதோர் அறிமுகம் உத்தரவாதம் பெற்ற தென்றறா உந்துருளி வந்துவிட்டது.

- பதிவுகள் அனைத்தும் சிவகுருவில் மேற்கொள்ளப்படும்.
- ஒரு வாரத்துக்குள் இலக்கத்தகடுகளுடன் புத்தகமும் வழங்கப்படும்.

இலவசம்
02 தலைக்கவசம்
02 மழைக்கவசம்
03 சுத்திகரிப்பு



(வன்னிப்பகுதிக்கான அங்கீகரிக்கப்பட்ட முகவர்)

(சி-10036)

# 110மாடி உலகவர்த்தகமைய கட்டடம் தகர்ப்பு

# விசாரணை கமிஷன் முடிவால் புஷ் கலக்கம்

## அரசியல் சேதத்தைத் தடுக்க கட்சியினருக்கு வேண்டுகோள்

**நியூயோர்க் நகரில் உள்ள 110 மாடிக் கட்டடம் (உலக வர்த்தக மையம்) 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் 11 ஆம் திகதி தீவிரவாதத் தாக்குதலால் தகர்க்கப்பட்டது குறித்து விசாரணை நடத்திய கமிஷனின் இறுதி அறிக்கையால் அமெரிக்க சனாதிபதி புஷ் கலக்கம் அடைந்துள்ளாரென தெரிவிக்கப்படுகிறது.**

சனாதிபதி தேர்தலை இந்த அறிக்கை பாதிக்குமோ என்ற கலக்கத்தில் இருக்கும் அவர் அரசியல் சேதத்தைத் தடுக்குமாறு கட்சியினரைக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்.

2001ஆம் ஆண்டு செப்டெம்பர் 11 ஆம் திகதி அல்-ஹைதா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 110 மாடிக்கட்டடம் தரைமட்டமானது. இதில் கிட்டத்தட்ட இந்த தாக்குதல் பற்றிய விசாரணைக் கமிஷனின் இறுதி அறிக்கை சமீபத்தில் வெளியானது. அதில் தீவிரவாதிகளின் சதித்திட்டத்தை முன்கூட்டியே அறிந்து தடுக்கத் தவறிவிட்டனர் என்று சனாதிபதி புஷ் மீதும் அவருக்கு முன்பு சனாதிபதியாக இருந்த கிளிண்டன் மீதும் கமிஷன் குற்றஞ்சாட்டி இருந்து.

அத்தோடு தாக்குதல் நடந்து 3 ஆண்டுகள் ஆகியும் விமானப் போக்குவரத்தும்,மற்றப் போக்குவரத்துகளும் தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இலக்காகக்கூடிய வகையில் போதுமான பாதுகாப்பு இல்லாமல் இருப்பதாகவும் கமிஷன் குற்றஞ்சாட்டி உள்ளது. கமிஷனின் இறுதி அறிக்கை, புஷ்ஷை குற்றாஞ்சாட்டியும் குறை கூறியும் இருந்ததால் இது வருகிற நவம்பர் மாதம் நடக்கவிருக்கும் சனாதிபதித் தேர்தல் முடிவைப் பாதிக்குமோ என்ற அச்சம் புஷ்சுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் கலக்க அடைந்த புஷ் அறிக்கை விளைவாக ஏற்படும் அரசியல் சேதத்தை தடுத்து நிறுத்தும்படி தன் கட்சியினரைக் கேட்டுக் கொண்டிருக்கிறார். சனாதிபதித் தேர்தலில் மீண்டும் போட்டியிடும் புஷ் ஒரு விழாவில் பேசுகையில் கமிஷனின் பரிந்துரைகள் குறித்தும் அரசு பரிசீலித்து வருவதாகக் கூறினார் புஷ்ஷை எதிர்த்து சனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஜான் கெரிக்கு இந்த அறிக்கையால் பெரிய அளவில் நன்மை ஏதும் கிட்டாது என்றும் அரசியல் விமர்சகர்கள் கருதுகிறார்கள் இந்த தாக்குதலுக்கு புஷ் நிர்வாகத்தை மட்டும் தனியாக கமிஷன் சுட்டிக் காட்டவில்லை என்றும் கிளிண்டனையும் சேர்த்துத்தான் குறை கூறி இருக்கிறது என்றும் விமர்சகர்கள் கூறுகிறார்கள்.

புஷ் நிர்வாகம் கூறியபடி இந்தத் தாக்குதலில் ஈராக் அரசுக்கோ சதாம் ஹுசைனுக்கோ தொடர்பு ஏதும் இல்லை என்றும் கமிஷன் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது இது புஷ்சுக்கு எதிரான கருத்துதான் என்றும் விமர்சகர்கள் கூறியுள்ளனர்.



ஐ.நா செயலர் கொபி அனான் விஜயம்செய்த போது சூடானில் இடம் பெயர்ந்த மக்களில் சிறுமி ஒருத்தி குழந்தையுடன் காணப் படுகிறாள்.

# பொஸ்னிய– குரோஷிய நகரங்களை இணைக்கும் பிரதான பாலம் 11 ஆண்டின் பின் திறந்து வைப்பு

பொஸ்னியாவில் முஸ்லிம் சமூகத்தினரையும்,குரோஷியா இனத்தவரையும் இணைக்கும் பாலம் ஒன்று 11ஆண்டு இடைவெளிக்கு பின்னர் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதன் புனரமைப்பிற்கு யுனஸ்கோ ஸ்தாபனம், உலகவங்கி, குரோஷியா, துருக்கி, இத்தாலி மற்றும் ஐரோப்பிய நாடுகள் நிதி உதவி வழங்கியுள்ளன. நேற்று முன்தினம் இப் பாலத்திற்கான திறப்புவிழா நிகழ்வு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

1993 ஆம் ஆண்டு நடைபெற்ற பொஸ்னியா போரின் போது குரோஷிய தீவிரவாதிகளால் இப் பாலம் தகர்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



பொஸ்னியாவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பாலத்தில் காவல்கடமையில் இருக்கும் பொஸ்னிய பொலிசார்.

# வடகொரியாவுக்கு 50 ஆயிரம்தொன் உணவுப் பொருட்களை அமெரிக்கா வழங்கும்?

(வோஷிங்டன்)

வடகொரியாவிற்கு 50 ஆயிரம்தொன் உணவுப் பொருட்களை அமெரிக்கா இவ் ஆண்டிற்குள் வழங்கவுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இரண்டு ஆண்டுகளாக நீடித்துவருகின்ற அணுவாயுதப் பிரச்சினை சம்பந்தமான நடவடிக்கைகளில் இரு நாடுகளும் ஓரளவு முன்னேற்றம் கண்டுள்ளதாகக் கூறப்படுகிறது. வடகொரியாவிற்கு உணவுப் பொருள் உதவிகளை வழங்குகின்ற நாடுகளில் முக்கியமான நாடான அமெரிக்கா வடகொரியாவின் அணுசக்தி விவகாரத்திற்கும், உணவுப்பொருள் உதவிக்கும் எவ்விததொடர்பும் இல்லையென அறிவித்துள்ளது.

இதனிடையே அணுவாயுத விவகாரங்கள் சம்பந்தமாக 06 நாடுகள் கூடி நடத்தவுள்ள உச்சிமாநாட்டில் இவ் உணவுப் பொருள் உதவி வழங்குவது தொடர்பாக ஆக்கபூர்வமான முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது. வோஷிங்டனில் நடைபெற்ற முக்கிய மாநாடொன்றிற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திலுள்ள வடகொரியத் தூதுவர் சமுகமளிப்பதற்கு அமெரிக்கா அனுமதி அளித்ததைத் தொடர்ந்து இவ் உணவுப்பொருள் உதவி வழங்கப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மத்தியில் பலமுனை அதிகார மையங்கள் பிரதமரின் கீழ் அரசாங்கம் இல்லை

## -எதிர்க்கட்சித் தலைவர் அத்வானி

(புதுடில்லி)

குற்றப் பின்னணி கொண்ட அமைச்சர்கள் குறித்து அறிக்கை அளிக்க பிரதமர் மன்மோகன் சிங் மறுத்துள்ளமை அவரது கட்டுப்பாட்டின் கீழ் அரசு இல்லை என்பதை காட்டுகிறதென எதிர்க்கட்சித் தலைவர் எல். கே.அத்வானி கூறியுள்ளார்.

புதுடில்லியில் நேற்று முன் தினம்செய்தியாளர்களிடம் பேசிய வேளை அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். தொடர்ந்து அங்கு அவர் கருத்து தெரிவிக்கையில்:

மத்தியில் பல முனை அதிகார மையங்கள் செயற்படுவதாலேயே பிரதமரால் தமது அரசை திறமையாக நடத்த முடியவில்லையெனக் குற்றம்சாட்டியுள்ளார்.



இந்தியாவில் குவாட்டி நகருக்கண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் வீடுவாசலை இழந்த குடும்பம் ஒன்று பாதுகாப்பான இடம்நோக்கி தற்காலிக படகுமூலம் பயணிக்கின்றனர்.

# சனாதிபதி முஷாரப்புடன் நட்வர்சிங் சந்திப்பு; காஷ்மீர் உட்பட முக்கிய பிரச்சினைகள் பற்றிப் பேச்சு

பாகிஸ்தானில் சனாதிபதி முஷாரப்பைமத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் நட்வர் சிங் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார்.

காஷ்மீர் உட்பட முக்கிய பிரச்சினைகள் பற்றி அவர்கள் பேச்சு நடத்தினார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. பாகிஸ்தானுக்கு 5 நாள் பயணமாக வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் சென்றிருந்தார். அங்கு நடைபெற்ற சார்க் நாடுகளின் வெளியுறவுத்துறை மாநாட்டில்அவர்கலந்து கொண்டார்.

நேற்று முன்தினம் அவர் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பை ராவல் பிண்டியில் உள்ள அவரது வீட்டில் சந்தித்துப் பேசினார். அப்போது சனாதிபதி அவர்கள் காஷ்மீர் விவகாரம் உட்படபல முக்கிய பிரச்சினைகள் பற்றிப் பேச்சு நடத்தினார்.1.00 மணி நேரம்இந்தப் பேச்சுவார்த்தை நீடித்தது. மத்தியில் காங்கிரஸ் தலைமையிலான அரசு அமைந்த பிறகு இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையேயான முதல் உயர் மட்டஅரசியல் ஆலோசனைக் கூட்டம் இதுவாகும். ஜம்மு காஷ்மீர் பிரச்சினை, எல்லை தாண்டிய பயங்கரவாதம் உட்பட இரு நாடுகளின் பல்வேறு விவகாரங்கள் அந்தப் பேச்சுவார்த்தையில் இடம்பெற்றன.



காஷ்மீர் தொடர்பாக பேச்சு நடத்தும் பாகிஸ்தான் சனாதிபதி பர்வேஷ் முஷாரப்பும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங்கும்.

# தாய்வானுக்கு ஆயுதம் விற்கவேண்டாம் அமெரிக்காவிடம் சீனா கண்டிப்பு

தாய்வானுக்கு அமெரிக்கா ஆயுதங்களை விற்கக்கூடாது என்று சீன வெளிநாட்டு அமைச்சர் லி ஷாவோ ஜிங் பசுபிக் பிரதேசத்துக்கான அமெரிக்க இராணுவத் தளபதி அட்மிரல் தாமஸ் பர்கோவிடம் வலியுறுத்தியுள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில; எந்தச் சூழ் நிலையிலும், தாய்வான் தனி நாடாகச் செயற்பட அனுமதிக்க மாட்டோம் என்றும் கூறினார். சீனாவுடன் தூதரக உறவை அமெரிக்கா ஏற்படுத்திக் கொண்டபோதிலும் தாய்வானுடன் அதிகாரபூர்வமற்ற முறையில் நல்லுறவை அமெரிக்கா வைத்துக் கொண்டிருக்கிறது. அதன் மீது தாக்குதல்நடத்தப் பட்டால் அதைக் காப்பதாகவும் உறுதியளித்துள்ளது. இந்த நிலையில் அந்த நாட்டுக்கு 90 ஆயிரம் கோடி ரூபாய்க்கு ஏவுகணைகளையும் எதிர்ப்பு ஆயுதங்களையும், நீர்மூழ்கிக் கப்பல்களையும் விற்பதற்கு இருக்கிறது. இதற்கு சீனா எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. எங்கள் தாய்நாட்டில் இருந்து தாய்வானைப் பிரிக்க யாரையும் அனுமதிக்கமாட்டோம் என்று சீன வெளிநாட்டு அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## 135 கோடி அபராதம்

நேபாள நாட்டில் பல ஆண்டுகள் மந்திரியாக இருந்து வந்த சிரஞ்ஜீபி வக்லே ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளார்.

இவர் மந்திரியாக இருந்த போது லஞ்ச ஊழல் மூலம் 165 கோடி ரூபாய்க்குச் சொத்து சேர்த்ததாக வழக்குத் தொடரப்பட்டது வழக்கை விசாரித்த நீதிபதி, வக்லேக்கு 2ஆண்டு சிறைத் தண்டனை விதித்ததோடு,135 கோடி ரூபாய் அபராதமும் விதித்து தீர்ப்புக் கூறினார்.

# சமுதாய சீரழிவுக்குள்ளான வவுனியா இன்று ஓரளவு சீர்செய்யப்பட்டுள்ளது

## மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன்

(செட்டிகுளம்)

**"போர் எங்கு நடைபெற்றாலும் அந்த நாட்டின் எல்லைப் பகுதிகள் சமுதாய சீரழிவுக்கு உள்ளாகும். வவுனியாவுக்கும் அதுதான் நடைபெற்றது. இன்று அவை சற்று சீர் செய்யப்பட்டுள்ளது." இவ்வாறு வவுனியா மாவட்ட நீதவான் எம். இளஞ்செழியன் தெரிவித்தார்.**

வவுனியா நூலகத்தில் புதன்கிழமை நடைபெற்ற 6ஆவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டு பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழர்கள் இரண்டு விடயங்களை விட்டுக் கொடுக்கமாட்டார்கள். ஒன்று பெண்களின் மானம். மற்றையது அவர்களுடைய கல்விச் செல்வம். யாழ். நூலகம் எரிக்கப்பட்டதன் பின்னர் தான் இந்த இனப் போராட்டம் உக்கிரம் அடைந்தது. இன்று வடக்கு-கிழக்குப் பிரதேசத்தில் வவுனியா நூலகம் தலை நிமிர்ந்து நிற்பது மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

வவுனியா மாவட்டமானது எல்லை மாவட்டம். உலகில் எங்கு போர் நடைபெற்றாலும் அந்த நாட்டின் எல்லைப் பகுதிகள் சமூதாய சீர் அழிவுக்கு உள்ளாகும். வவுனியாவுக்கும் அது தான் நடைபெற்றது. இன்று அவை சறறு சீர் செய்யப்பட்டுள்ளது. வவுனியாவில் விபசாரம், இயக்கங்களின் அடாவடித்தனங்களும் தலைத்தூக்கி இருந்தது. ஆனால், இன்று சில மாறுதல்கள் ஏற்பட்டுள்ளது. எனவே, பல விடுதிகள் சீல்வைக்கப்பட்டுள்ளமையும், ஒரு விபசாரிகூட வெளியில் திரியாமல் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வவுனியா மாவட்ட நீதிமன்றில் நாள் ஒன்றுக்கு 250 வழக்குகள் விசாரணை செய்யப்படுகின்றது. நாள் ஒன்றுக்கு நீதவானுக்கு 100 கடிதங்கள் வருகின்றன. அவற்றில் 99 கடிதங்கள் மொட்டைக் கடிதங்கள். ஒன்று மட்டுமே கையொப்பம் இடப்பட்டு வருகிறது. நகரத்திற்கு நாள் ஒன்றுக்கு 25,000 மக்கள் வருகை தருகின்றனர். வவுனியாவின் ஊடாக அவர்கள் பிரயாணம் செய்கின்றனர். வவுனியா நகர சபையாக இருப்பது விரைவாக மாநகர சபையாக மாற்றப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார் (21)

### வைத்திய நிபுணர் நியமனம்

பொது வைத்தியசாலையாக தரம் உயர்த்தப்பட்ட மன்னார் ஆஸ்பத்திரிக்கு நிரந்தர மாவட்ட வைத்திய அதிகாரி நியமிக்கப் பட்டதன் பின்னர் டாக்டர் அறிவழகன் வைத்திய நிபுணராக நியமனம் செய்யப் பெற்றுள்ளார். நீண்டகாலமாக இங்கு வைத்திய நிபுணர் இல்லாதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (மி)



மக்கள் வங்கியின் 43ஆவது வருட சேவையை முன்னிட்டு முல்லைத்தீவு நடமாடும் மக்கள் வங்கிக் கிளையில் நேற்று முன்தினம் கிளை முகாமையாளர் செல்வேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் கடந்த ஆண்டு ஜயஸ்ரீ சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற வாடிக்கையாளர் ஒருவருக்கு முல்லை. அரச அதிபர் தங்க நாணய பரிசை வழங்குகின்றார். (படம் : சகீலா)

# மேலும் இருபது அகதிகள் தாயகம் திரும்பினர்

(மன்னார்)

இந்தியக் கருவூர் மாவட்டம்,புலித்தலை அகதிமுகாம் இராமநாதபுர மாவட்டம், மண்டபம் அகதிமுகாம், திருநெல்வேலி மாவட்டம், கோபால் சமுத்திரம் அகதிமுகாம் ஆகிய இடங்களில் இருந்து மேலும் 20 அகதிகள் நேற்று முன்தினம் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்கள் அனைவரும் கடந்த வியாழனன்று அதிகாலை சிறிய படகு மூலம் இராமேஸ்வரப் பகுதியில் இருந்து புறப்பட்டு தலை மன்னார் கடற்படை முகாமில சரணடைந்தார்கள். அவர்களை தலை மன்னார் கடற்படையினர் நேற்று முன்தினம் மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இவர்களைப் பொறுப்பெடுத்த மன்னார் நீதிபதி எம்.எம் அப்துல்லா அகதிகளின் சொந்த இடமான கிளிநொச்சி செல்வாநகர், கிளிநொச்சி ஜெயபுரம், கிளிநொச்சி லக்ஸ்சபானா, திருகோணமலை கும்புறுப்பிட்டி, திருகோணமலை உப்புவெளி ஆகிய இடங்களுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுத்தனர். (மி)

# மட்டக்களப்பில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை 2006ஆம் ஆண்டளவில் அகற்றிவிட முடியும்

## மெக் நிறுவனம் நம்பிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் நிலவிய காலப்பகுதியில் புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை 2006 ஆம் ஆண்டளவில் அகற்றி விட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது

கண்ணி வெடி அகற்றும் சர்வதேச மெக் நிறுவனம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 57 கிராமங்கள் கண்ணிவெடி ஆபத்து நிறைந்த இடங்களாக மெக் நிறுவனத்தால் அடையாளம் காணப் பட்டுள்ளன. இவற்றை அகற்றுவதற்கு மெக் நிறுவனத்துக்கு தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் உதவவுள்ளது. வடக்கு கிழக்கு மற்றும் எல்லைக்கிராமங்களில் கண்ணிவெடி அகற்றல் நடவடிக்கைளில் சுமார் ஒன்பது சர்வதேச நிறுவனங்கள் தற்சமயம் ஈடுபட்டு வருகின்றன. இதில் இந்தியாவைச் சேர்ந்த இரண்டு நிறுவனங்களும் அடங்கும். (32)

# சாரதி அனுமதிப் பத்திரம் வழங்க நடவடிக்கை எதுவும் இல்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மோட்டார் ஊர்தி சாரதிகளுக்கான அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரீட்சைகள் நடைபெறாமையினால் மோட்டார் ஊர்திகளை வைத்திருப்போர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.இதற்கானநடவடிக்கையாக 2003 சனவரி மாதத்தில் அதற்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு கட்டணமாக 600ரூபா பெறப்பட்டது. அதற்கான பரீட்சைகள் நடமாடும் சேவை மூலம் நடாத்தப் படும் என எதிர்பாக்கப்பட்ட போதும் அவ்வாறான நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (20)

# வவுனியாவில் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் விண்ணப்பம் கோரல்

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா தெற்கு கல்வி வலய பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்காக பகுதி நேர ஆங்கில ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இவ்வாறு பகுதி நேர ஆங்கில ஆசிரியர்களாக நியமிக்க தகுதி வாய்ந்தவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் "A" அல்லது "D" சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தியும், க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒரே தடவையில் 3பாடங்களில் சித்தி பெற்றவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியானவர்கள் எனவும், இவர்களை எதிர்வரும் புதன் கிழமை (28.07.2004) காலை 9.30 மணிக்கு கல்விச் சான்றிதழ்கள், சிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை என்பவற்றுடன் வவுனியா தெற்கு வலயக் கல்வி அலுவலக முகாமைத்துவ மண்டபத்திற்கு சமுகமளிக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி V.R ஒஸ்வேல்ட் கேட்டுள்ளார். (10)

# முன்பள்ளிக் கல்விக் கொள்கை திட்டத்தை ஏற்று சர்வதேச நிதிநிறுவனங்கள் உதவ முன்வந்துள்ளன

## மாகாண இணைப்பாளர் கே. கணேசலிங்கம்

(மட்டக்களப்பு)

வடக்குக் கிழக்குப் பூராக ஒரே முன்பள்ளிக் கல்விக் கொள்கைத் திட்டத்தை நாம் அறிமுகப்படுத்தினோம். அதனை வரவேற்ற சர்வதேச நிதி நிறுவனங்கள் தாமாகவே உதவ முன்வந்துள்ளன. இவ்வாறு கல்முனைப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான 7 நாள் செயலமர்வை ஆரம்பித்து வைத்துப் பேசிய தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளி பாடசாலைகளின் வட-கிழக்கு மாகாண இணைப்பாளர் கே.கணேசலிங்கம் தெரிவித்தார். கல்முனை கிறிஸ்தா இல்லத்தில் முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.அகமட் தலைமையில் புதன் அன்று மேற்படி செயலமர்வின் அங்குரார்ப்பண வைபவம் நடைபெற்றது. அங்கு இணைப்பாளர் மேலும் பேசுகையில், வட.கிழக்கிலுள்ள 135 இணைப்பாளர்களுக்கு அந்தந்த மாவட்டங்களில் இத்தகைய பயிற்சி நெறி வழங்கப்படுகிறது. சர்வதேச நிதி நிறுவனங்களின் அனுசரணையுடன் இவை நடாத்தப்பட்டு வருகின்றன. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தமது சொந்த நிதியில் இதுவரை எந்தப் பயிற்சியையும் பெற்றிராத கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று வலயங்களைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்களுக்கு ஆகஸ்ட் மாத முற்பகுதியில் பயிற்சி நெறியினை ஆரம்பிக்கத் திட்டமிட்டுள்ளது. முதற்கட்டமாக 4 நாட்களுக்கு இப்பயிற்சி நெறி நடாத்தப்படும். இங்கு பயிற்சி பெறும் ஆசிரியர்கள் அங்கு வளவாளர்களாகச் செயற்படுவார்கள். முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் தமக்குள்ளே விளையாட்டுப் போட்டிகளை நடாத்துகின்ற அதேவேளை பிரதேச ரீதியில் குழுவான 15-20 முன்பள்ளிப் பாடசாலைகளிணைந்த விளையாட்டுப் போட்டிகளை நடாத்த வேண்டும். இது சிறுவர் மற்றும் சமூகம் மத்தியில் கருத்துப் பரிமாற்றத்திற்கு வித்திடும். முன்பள்ளித்திட்டத்தில் பெற்றோர் போதிய ஒத்துழைப்பு வழங்கும் வகையில் பயிற்சியாளர்கள் விழிப்புணர்வுடன் செயற் திட்டங்களை நடைமுறைப்படுத்தவேணடும்"என்று கேட்டுக் கொண்டார். 'போரூட்' நிறுவன பிரதிநிதி செல்வி. அந்திரேசாபிள்ளை,உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோரும் கலந்து கொண்டு உரையாற்றினர். கல்முனையிலிருந்து 18 முன்பள்ளி ஆசிரியர்களும், மன்னார், வவுனியா, திருமலை மாவட்டங்களிலிருந்து 4 ஆசிரியைகளும் இதில் பங்கு பற்றினர்.

# பூநகரிப் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரம் அனுஷ்டிப்பு

உள்ளூராட்சி வாரத்தையொட்டி பூநகரிப் பிரதேச சபையால் கடந்த 19ஆம் திகதி முதல் 25ஆம் திகதிவரை சிரமதானப் பணி, உணவுச்சிற்றுண்டிச்சாலைகளை பரிசோதனை செய்தலும், பால்மா விநியோகம் என்பன நடைபெற்று வருவதோடு பூநகரிப்பிரதேச சபையின் செயலாளர் செ.பவானியின் தலைமையில் 22ஆம் திகதி ஜெயபுரம் சந்தையில் சிரமதானமும், ஆயுர்வேத வைத்தியசாலையில் கருத்தரங்கும் நடைபெற்றது. இதில் சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர், சனசமூக நிலைய உத்தியோகத்தர் கருத்துக்கள் இடம்பெற்றதுடன் சுகாதாரச்சேவை உத்தியோகத்தர்கள் எனப் பல பொது அமைப்புக்களின் பிரமுகர்கள், பொதுமக்கள் கலந்து சிறப்பித்தனர். (34)

# மாவீரர் நினைவாக பெயர் சூட்டல்

(முல்லைத்தீவு)

சிலாவத்தை தியோகு நகர் முன்பள்ளிக்கு மாவீரர் புகழருவியின் பெயர் சூட்டல் நிகழ்வு முல்லை. மக்கள் நலன் புரிச்சங்க இணைப்பாளர் தலைமையில் நடை பெற்றது.

இந்த நிழ்வில் கடற்புலிகளின் முல்லை. பிரதேசப்பொறுப்பாளர் அரவிந்தன்,மனிதவளமேம்பாட்டு நிலைய அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் மணிவண்ணன், சநதி.இணைப்பாளர், ச.பொ.அகுழுத் தலைவர் முன்பள்ளி பெற்றோர்கள், எனப்பலர் கலந்துகொண்டனர். (20)

# ஆக்கிரமிப்பாளரின் திட்டமிட்ட நடவடிக்கைகள்

# எமது போராட்டத்தை மேலும் வலுவாக்கும்!

## யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்

(யாழ்ப்பாணம்)

**எந்தச் சந்தர்ப்பத்திலும் யாரையும் தோற்கடிக்கக்கூடிய பலம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு உண்டென யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.**

லெப்டினன்ட் செல்லக்கிளி அம்மானின் 21ஆவது ஆண்டு நிறைவுதின நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிய வேளை அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தொடர்ந்து அங்கு அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது போராட்டமானது இன்று அரசியல் இராணுவரீதியில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற ஒரு போராட்டமாக மாறியுள்ளது. நாம் இன்று எமக்கென பெருமளவான நிலத்தினையும் அவ்நிலத்தினை பாதுகாக்கக் கூடிய இராணுவ அரசியல் பலத்தினையும் அவ்நிலத்திற்கே உரித்தான பலமான ஒருகட்டுமான அமைப்பையும் பெற்றுள்ளோம். எனவே ஒரு இனத்திற்கு நீதியாகவுள்ள முற்று முழுதான சர்வதேச அங்கீகாரத்தையும், ஆதரவையும் பெற்றால் எமக்கு வெற்றி நிச்சயம்.

அத்துடன் தமிழ் இனத்தை அழிப்பதற்கென வடிவம் கொடுத்தவர்கள் இன்று தமிழினத்தை காப்பதெற்கென சட்டவடிவம் கொடுக்கிறார்கள் சிங்கள பௌத்த இனவாத கட்சிகளும், இராணுவமும் சாதித்தது என்ன? எமது உறவுகள் சிதறடிக்கப்பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டிருந்தாலும் தமிழ்த் தேசியம் இன்று வலுப்பெற்றுள்ளது. தமிழ் தேசியத்தை யாரும் சிதைக்க முடியாது.

ஆக்கிரமிப்பாளர்கள் எடுக்கின்ற எந்த நடவடிக்கையும் எமது போராட்டத்திற்கு ஒருபடி வேகத்தையும், பலத்தையுமே கொடுத்திருக்கின்றது. எனவே எந்தவோர் சந்தர்ப்பத்திலும் யாரையும் தோற்கடிக்கக் கூடிய பலம் எமக்கு உண்டென அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை போர் மீண்டும் திணிக்கப்பட்டால் அதுவே தமிழ் இனத்திற்கு எதிராக மேற்கொள்கின்ற இறுதிப் போராக இருக்கும் என இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய ரெலோ முதல்வரும், சட்டத்தரணியுமான சிறிகாந்தா தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், எமது மண்ணில் மீண்டும் ஓர் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படுமாயின் தமிழ் மக்களின் உரிமைகளை புலிகள் தவறாது பெற்றுத் தருவார்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. மீண்டும் எமது மண்ணில் போர் வெடிக்குமாயின் அதனை ஆரம்பிப்பது புலிகளாக இருக்கமாட்டார்கள். ஏனெனில் தேசவிரோத கும்பல்களாலும் இராணுவத்தினராலும் எத்தனையோ எமது உறவுகளும், மக்களும் கொல்லப்பட்டபோது பொறுமைகாத்த புலிகள் தாமாகப் போரைத் தொடங்க மாட்டார்கள். ஆனால் அரசு மீண்டும் ஓர் போரை எம்மீது திணிக்குமானால் தமிழீழ விடுதலைப்புலிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்லாமல் ஒட்டுமொத்த தமிழ்சமூகமே இப்போரை சந்திக்க வேண்டிவரும். அப்படியாக எம்மீது திணிக்கப்படுகின்ற இப் போரே தமிழினத்திற்கான இறுதிப் போராக அமையும் என்றால் இப்போராட்டமானது எமது வீரமரணப் போராட்டமாக அமையும். எனவேதான் சமாதானத்தை விரும்பும் தமிழனும் சுதந்திரத்தை விரும்பும் தமிழனும் போருக்குத் தயாராக இருக்கவேண்டும் என்றார். (36)

# சாவகச்சேரி நகரிற்கு குடிநீர்விநியோக திட்டம்

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய நீரப்நிறுவனம் முன்வந்துள்ளது இதற்குஅமைவான திட்டங்கள் சாவகச்சேரி நகரசபையுடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

இத்திட்டதின் கீழ் நகரின் குடிநீர் தேவையுள்ள பகுதிகள் இனங்காணப்பட்டு அதற்கானபணிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. பேருந்து நிலையம் உள்ள பகுதி, சந்தைப் பகுதிகள், கடைத்தொகுதிகள் என குடிநீர்குழாய்கள் இணைப்பு கொடுக்கப்பட உள்ளன. இத்திட்டத்திற்கு 'நீரப்' நிறுவனம் ரூபா.அறுபதுலட்சம் ஒதுக்கியுள்ளது. அத்துடன் புதிய கிணறுகள் அமைத்தல், மேல் நிலைநீர் தொட்டிகள் அமைத்தல் போன்றவை நடைபெறவுள்ளதாக நகரசபைத் தலைவர் மு.செ.சரவணபவன் தெரிவித்துள்ளார். (28)

## திருநெல்வேலிப் பகுதியில்

# பால் பதனிடும் நிலையம் அமைக்க ஐ.நா.நிதியுதவி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருநெல்வேலிப் பிரதேச கால்நடை உற்பத்தியாளர்களின் அபிவிருத்தி மேம்பாடுகளுக்கு உதவுவதற்கு ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த அடிப்படையில் திருநெல்வேலி அபிவிருத்திச் சங்கத்திற்கு பால் பதனிடும் நிலையம் ஒன்று அமைப்பதற்கு ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 67 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிதி மூலம் திருநெல்வேலியில் பால் பதனிடும் நிலையம் ஒன்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

# பயணிகள் தங்கும் விடுதி சங்கப் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பயணிகள் தங்கும் விடுதிச் சங்கப்பொதுக் கூட்டம் கடந்த புதன்கிழமை யாழ்.மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றிய நடுவப் பணிமனையில் விடுதிகள் சங்கத் தலைவர் ரா.ராஜதேவன் தலைமையில் நடைபெற்றது.

பயணிகள் தங்கும் விடுதிகள் நடாத்தும் 40 இற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் இக்கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தனர். யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியச் செயற்பாடுகளையும், சமகால அரசியல் நிலைப்பாடு குறித்து ஒன்றிய பொதுச் செயலாளர் க.கனகலிங்கம் கருத்துரை வழங்கினார். விடுதிகளின் நடவடிக்கைகள் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியப் பணிப்பாளர் சுதாஸ் கருத்துரை வழங்கினார். விடுதிகள் தொடர்பாக சில தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. (36)

# அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் யாழ்.உயர் தொழில் நுட்ப நிறுவனம்

## மாணவர் ஒன்றியம் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனம் அடிப்படை வசதிகள் அற்ற நிலையிலேயே இயங்கி வருவதால் இங்கு கற்றுவரும் மாணவர்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்கின்றனர்.

நீண்ட காலமாக பலாலி வீதி, திருநெல்வேலியில் உள்ள தனியார் கட்டடம் ஒன்றில் இயங்கி வரும் இத்தொழில்நுட்ப நிறுவனத்திற்கு வகுப்பறை வசதிகள் போதியளவில் இல்லாததினால் மாணவர்கள் தற்காலிக கொட்டகைகளிலேயே தமது கற்றலை தொடர்வதுடன், இங்கு நிலவும் தளபாடப் பற்றாக்குறை, மலசல கூட வசதிகள் போதாமை, கற்றல் உபகரணங்கள் இன்மை போன்ற குறைபாடுகள் மத்தியில் மிகுந்த அசௌகரியங்களை அனுபவித்து வருகின்றனர்.இதனால், இங்கு பயின்று வரும் மாணவர்களின் கல்வி நிலையால் பெரும் பாதிப்பு ஏற்பட்டிருக்கின்றது. எனவே இவற்றை கவனத்தில் கொண்டு உரிய தரப்பினர் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியம் கோரிக்கை விடுத்துள்ளது. (33)

# தேசிய எழுச்சிப் பேரவையின் செயற்பாடு தேசத்தை கட்டியெழுப்பும் வகையில்வேண்டும்

## பேரவையின் ஊடகப்பேச்சாளர் வலியுறுத்து

தமிழீழத் தேசிய எழுச்சிப் பேரவையின் மானிப்பாய் பிரதேச மாதாந்த வீரமுரசு கலையரங்க நிகழ்வு கடந்த வியாழக்கிழமை மானிப்பாய் செல்வமுத்து கலையரங்கில் இடம்பெற்றது.

மானிப்பாய் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் க.சிவகுமார் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் பொதுச்சுடரினை லெப். கேணல் நியூட்டன், லெப்.முத்து ஆகிய மாவீரர்களின்தாயார் திருமதி. தம்பிராசா பரிமளம் ஏற்றி வைத்தார்.

ஈகைச்சுடரினை மானிப்பாய் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பம், மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி ஆசிரியை செல்வி. க.தபோதினி, மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆசிரியர் ப.லோகேஸ்வரன் ஆகியோர் ஏற்றி வைத்தனர். மானிப்பாய் இந்துக்கல்லூரி, மானிப்பாய் மகளிர்கல்லூரி மாணவ, மாணவிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இதேவேளை சிறப்புரையினை ஆற்றிய தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளர் ப.கனகலிங்கம் தமிழ்த்தேசிய எழுச்சியை ஏற்படுத்தவே தலைவர் அவர்கள் தேசிய எழுச்சிப் பேரவையை உருவாக்கினார். எனவே எமது இனத்தின் அரசியல் அபிலாசைகளைநிறை வேற்றவும், எமது தேசத்தை கட்டியெழுப்பவும்தேசியஎழுச்சிப்பேரவையைத் திறம்பட கட்டியெழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். (27)





கடந்த 18ஆம் திகதியன்று கறுப்பு யூலை நினைவாக சுவிஸில் நடைபெற்ற நிகழ்வு.

# இராணுவம் முகமாலையில் அச்சுறுத்தல்

## -மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

(வடமராட்சி)

முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியில் வைத்து சோதனை நடவடிக்கையென்ற பெயரில் தான் அச்சுறுத்தப்படுவதாக விடுலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் வசித்துவரும் வர்த்தகரொருவர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வடமராட்சி கிழக்கின் வத்திராயன் வடக்கு தாளையடியைச் சேர்ந்த வர்த்தகரொருவரே இம்முறைப்பாட்டை செய்துள்ளார்.

குறித்த வர்த்தகர் தாளையடிப் பகுதியில் கடையொன்றினை வைத்திருப்பதாகவும், தனது வர்த்தக நிலையத்திற்கான பொருட்களை வாங்குவதற்காக யாழ்ப்பாணத்திற்கு வந்து செல்லவேண்டி இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்நிலையில் முகமாலை இராணுவச் சோதனைச்சாவடியில் வைத்து சோதனை நடவடிக்கை என்ற பெயரில் தனக்கு அச்சுறுத்தல் விடுவிக்கப்படுவதாகவும், கெட்ட வார்த்தைகளால் தன்னைப்படையினர் பேசி வருவதாகவும் தெரிவித்துள்ள அவர் இறுதியாக யாழ்ப்பாணத்திற்கு வந்த வேளையில் தனது அடையாள அட்டை பறிக்கப்பட்டதுடன் தனது ஆடைகளை கிழித்து அவமானப்படுத்தியதாகவும் தெரிவித்துள்ளார். (27)

# தி.மு.க.வின் அரசியல் கணக்கு பிழைக்குமா?



தமிழகத்தில் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் ஆரம்பமாகியுள்ளது. மக்களவைத் தேர்தலையடுத்து தமிழகத்தில் முதன் முதல் கூடும் சட்டப் பேரவைக் கூட்டத்தில் தி.மு.க தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணி கட்சிகள் கலந்து கொள்ளவில்லை.

அதாவது ஆளும் கட்சிக்கும், எதிர்க் கட்சிகளுக்குமிடையே மீண்டும் இழுபறி நிலை தொடங்கியிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும்.

ஏனெனில் சட்டப்பேரவைக் கூட்டத் தொடரை குறைந்தது 15 நாட்களாவது நடத்த வேண்டும் என்று தி.மு.க.வின் எதிர்க்கட்சிகள் கேட்டிருந்தன.

ஆனால் கூட்டத்தொடர் எட்டு நாட்கள் மட்டுமேயன்றி ஒரு நாள் கூட மேலதிகமாக நடைபெறாது


டி.ஆர்.பாலு


தயாநிதி மாறன்


அன்புமணி


ரகுபதி


பழனி மாணிக்கம்

என்று தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கறாராக அறிவித்து விட்டார்.

நடந்து முடிந்துள்ள மக்களவைத் தேர்தலில் தி.மு.க தலைமையிலான சனநாயக முற்போக்குக் கூட்டணிக் கட்சிகள் வரலாறு காணாத சாதனை படைத்திருக்கின்றன. 40 தொகுதிகளையும் தம் வசம் கொண்டிருக்கின்றது. அ.தி.மு.க வுக்கு ஒரு தொகுதி கூட தக்கவைக்க முடியாத பரிதாபகரமான நிலை அது.

அதனால் தான் தமிழகத்தை தான் தக்க வைத்துக் கொள்வதற்காக சட்டங்களைத் திரும்பப் பெற்றும் சலுகைகளை அள்ளிவீசுவதிலும் அவர் தீவி ரம் காட்டி வருகின்றார்.

இதனை நன்கு புரிந்து வைத்திருக்கும் தி.மு.க தலைவர் கருணாநிதி தமிழக முதலமைச்சரை எந்த வழியில் சென்றால் மடக்க முடியும் எனும் உத்திகளை முடுக்கி விட்டுள்ளார். இதற்கான நகர்வுகளில் ஒன்றே தான் சட்டப் பேரவைப் புறக்கணிப்பு எனலாம்.

ஆனால் சனநாயக முற்போக்குக் கூட்டணி சட்டப்பேரவை கூட்டத்தொடரை புறக்கணிப்பதனால் பெரிதாக எதுவித இலாபத்தையோ நன்மைகளையோ பெற்றுவிடப்போவதில்லை.

சிறியதொரு நன்மை மட்டும் கிட்ட முடியும். சட்டப்பேரவையில் எடுக்கப்படும் முடிவுகளுக்கும்,தமக்கும் எந்தவித தொடர்புமில்லை. ஏனெனில் நாங்கள் கூட்டத் தொடரில் பங்கேற்கவில்லை என்று கைகளை விரிக்கமுடியும்.

ஏற்கனவே அ.தி.மு.க. வை அசைத்துப் பார்க்கும் படலங்களை தி.மு.க முடுக்கி விட்டிருக்கின்றது இதற்காகத்தான் மத்தியில் தி.மு.க தலைவர் அடம் பிடித்து அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டதாக ஆளும் கட்சியின் குற்றச்சாட்டும் இல்லாமல் இல்லை.

அதாவது தான் பெற்றுள்ள மத்தியமைச்சுப்பதவிகளைக் கொண்டு தி.மு.க தலைவர் கருணாநிதி முதலில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களை அகற்றும் நடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளார். ஏனெனில் அவர்களை அப்புறப்படுத்துவதன் மூலம், தமிழக முதலமைச்சரை தனிமைப்படுத்தி, அரசியலில் இருந்து ஓரங்கட்ட வைப்பதும், அவரது அரசியல் கணக்காகவும் இருக்கமுடியும்.

இந்தவகையில் தான் தமிழக டி.ஐ.ஜி முகமது அலி கைது செய்யப்பட்டிருப்பதாகும். முத்திரைத் தாள் மோசடியில் 1998 இல் இருந்து ஈடுபட்டதாக முகமது அலி கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர் முகமது அலி என்றும், அவரைக் கூட கைதிலிருந்து காப்பாற்ற முடியாதநிலையை தி.மு.கவின் சட்டத்துறை ஏற்படுத்தி விட்டதாகவும் விமர்சனங்கள் எழுந்திருந்தன.

அதாவது 1998 இல் இருந்து 2002 வரையான முத்திரைத்தாள் மோசடிகளை கிளறியெடுத்தே, முகமது அலி கைது செய்யப்பட்டிருப்பது, எந்தவகையிலும் முகமது அலியை தமிழக அரசால் காப்பாற்ற முடியாத நிலையை திட்டமிட்டு ஏற்படுத்தி விட்டதாகத் தான் கருத முடிகின்றது. முகமது அலியுடன் தி.மு.க தலைவர் திருப்தி அடைவார் என்று எதிர்பார்க்க முடியாது.

அதனை உண்மை என்பது போலவேதான் தமிழக அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குவதில் தீவிரம் காட்டி வருகின்றார்.

அந்த வகையில் அ.தி.மு.க தமிழகத்தில் பதவியேற்ற பின்னர் சட்டம், ஒழுங்கு நிலவரம் பற்றிய குற்றச்சாட்டுக்கள் தமிழக ஆளுநருக்கு எத்தனை சென்றதோ... அத்தனையும் தி.மு.கவின் மத்திய இணையமைச்சர் ரகுபதியால் நகல் எடுக்கப்பட்டு, தி.மு.க தலைவரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றது.

அதுமட்டுமன்றி நள்ளிரவில் கலைஞர் கைது அதைத்தொடர்ந்து போராட்டம் நடத்தியவர்களில் கொலை வெறித்தாக்குதல் அப்போது புகைப்படம் எடுக்கப்பட்டவர்கள் சிறையில் அடைப்பு என்பன பற்றியும் உள்துறை அமைச்சர் சிவராஜ் பட்டேல் தமிழக ஆளுனரிடம் வாக்குமூலம் பெற்றுள்ளதாகவும் தெரிய வந்திருக்கின்றது.

அத்துடன் நிதித்துறையின் வருவாய்ப்பிரிவை கையில் வைத்திருக்கும் பழனிமாணிக்கம் தமிழகம் தொடர்பான வருமான வரித்துறை வழக்குகளை புரட்டத் தொடங்கியிருக்கிறார். அரசியல் ரீதியாக எந்த வழக்கையும் தனிப்படுத்திப் பார்க்காமல் மொத்தமாக அத்தனை வழக்குகளையும் முடுக்கிவிடுமாறு தி.மு.க. தலைவர் கண்ஜாடை காட்டியுள்ளதாக கூறப்படுகின்றது. அப்போது தான் ஜெயலலிதா மீதான வருமான வரித்துறை வழக்கும் இதில் தானாகவே சேர்ந்து கொள்ளும் என்று நம்பமுடியும்

இதேவேளை தமிழகம் தொடர்பான நிதித்துறை வழக்குகளில் எந்தவித பாராபட்சமும் காட்டப்படமாட்டாது தீவிரப்படுத்தப்படும் என்று நிதிஅமைச்சர் சிதம்பரம் தி.மு.க தலைவருக்கு உறுதியளித்திருக்கின்றார் எனும் சேதியும் உலாவுகின்றது.

அது மட்டுமன்றி சமூகநலத் துறை அமைச்சர் சுப்புலட்சுமி மத்தியரசின் நிதியுதவியோடு மாநிலங்களின் சமூக நலத் திட்டங்கள் சரியான முறையில் நடை பெற்றதா........என்று தீவிரமாக ஆராய்வதில் இறங்கியுள்ளார். தமிழகத்தில் மிகக் கூடுதலாக அக்கறை காட்டுகின்றார் என்று நம்பப்படுகின்றது.

கிண்டியில் தொடங்கி மீனம்பாக்கம் விமானம் நிலையம் வரை பறக்கும் பாலத்திற்கு மறுபடியும் உச்சாகத்துடன் உயிர் கொடுக்கும் முயற்சிகளில் டி.ஆர் பாலு தொடங்கியுள்ளார். தயாநிதி மாறனின் சென்னை தொகுதியில் சேர்த்துப்பட்டு புகையிரதப் பாதை அரை குறையாக இருக்கிறது சென்னை மாநகராட்சி தன் பணிகளை சீராகச் செய்யவில்லை. என்று தயாநிதி மாறன் பா.ம.க.புகையிரத நிதியமைச்சர் வேலுவிடம் முறைப்பாடு செய்துள்ளதை அடுத்து அந்தப் பாலத்தை பார்வையிட்டுள்ள வேலு அதன் பணிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை சென்னையில் கொலராபீதி ஏற்றபட்டு இருந்த வேளை சுகாதாரத்துறை அமைச்சர் அன்புமணி, முன்பு சுகாதார அமைச்சு ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அதிகாரிகளை கேள்விகளால் தொலைத்து எடுத்துள்ளார். தமிழகம் தொடர்பாக நன்மை, தீமைகளை எடுத்துரைக்க மத்திய அமைச்சரவையில் ஒருவர்கூட இல்லாத நிலையில் புதிய மத்திய அமைச்சர்களின் நடவடிக்கைகளினால் அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பூதமாகத் தெரிவது போன்று தமிழக அமைச்சர்கள் மத்தியில் பீதி உருவாகியுள்ளது. மத்திய அமைச்சர்கள் எதைச்சொன்னாலும் எதைச் செய்தாலும் தமிழக அமைச்சர்கள் தங்களைக் குறிவைப்பதாகவே கலங்குகின்றனர். சுருக்கங்கூறின் மத்திய அமைச்சின் தமிழகம் தொடர்பான நடவடிக்கைகள் தமிழக அமைச்சர்களை கலவரப்படுத்தாமல் இல்லை எனலாம் இவற்றை எல்லாம் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா கவனிக்காது இருப்பார் என்று நம்புவதற்கில்லை. ஆனால் தமிழக சட்டசபைத்



தேர்தல் வெற்றியை இலக்கு வைத்துத்தான் அவர் தயார்ப்படுத்தலில் இறங்கியிருக்கின்றார்.

இவற்றின் முன்னோடி தான் தமிழக டி.ஐ.ஜி. முகமது அலிக்கும் தனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும் அவரைக் காப்பாற்றும் எண்ணம் தனது அரசுக்கோ தமக்கோ இல்லை எனும் தற்போதைய அவரது பகிரங்க அறிக்கை என்று கூறமுடியும்.

அத்துடன் முத்திரைத்தாள் மோசடி வழக்கில் தீவிர விசாரணைகளுக்கு முடுக்கிவிட்டது தாம்தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

எது எப்படியோ.... தமிழக முதலமைச்சரைசுற்றி வளைப்பதில்

**அ.கலைவாணி**

தி.மு.க தலைவர் தீவிரம் காட்டி வருகின்றார். அத்துடன் 2006இல் சட்டச்சபைத் தேர்தல் மூலம் தமிழகத்தை தம் கைவசப்படுத்துவதிலும் அவர் அதிதீவிரம் காட்டி வருவதாக கூறப்படுகின்றது.

என்வே 2006 சட்டசபைத் தேர்தல் மூலம் ஜெயலலிதா தமிழகத்தை தக்கவைத்துக் கொள்வாரா.... அதுமுடியுமா....... என்பதே இன்று அவரை சுற்றியிருக்கும் அதிமுகவினிரின் வினாவாகும்...

## மாதிரி மீன் குடியேற்றத் திட்டத்திற்கென மட்டக்களப்பில் 10 கிராமங்கள் இனம் காணல்

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாதிரி மீன் குடியேற்றத் திட்டத்திற்கென 10 கிராமங்கள் நிக்கொட் திட்டத்தின் கீழ் இனம் காணப்பட்டுள்ளதாகப் பிரதி திட்டப்பணிப்பாளர் சிவானந்தராஜா தெரிவித்தார்.

இக்கிராமங்களில் விரைவில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நிக்கொட் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. மாதிரி மீன் குடியேற்றத் திட்டத்திற்கென மண்டூர் யுனிற்-39, உன்னிச்சை, சுவாமிமலை, புல்லுமலை, ஆனைகட்டியவெளி, ஓமடியார்மடு, கோராவெளி, மாங்கேணி ஆகிய கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. 2003ஆம் ஆண்டு இறுதி வரை மட்டக்களப்பு மாவட்டத்தில் 5537 பேர் மீள் குடியேற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெயர்ந்த 32,215 பேர் இன்னும் தமது சொந்த இடங்களுக்கு மீளத் திரும்பவில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த மாவட்டத்தில் அபிவிருத்திக்கு என ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் 2 திட்டங்கள் அமுல் படுத்தப்படுகின்றன.

நிக்கொட்திட்டத்தன் கீழ் 68 செயல் திட்டங்கள் அமுல் செய்யப்படவுள்ளதோடு மொத்தமாக இதற்கு 232 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## சிவராமின் வீட்டை பொலிசார் சோதனையிட முயற்சி

ஊடகவியலாளர் சிவராமின் வீடு மீண்டும் ஒரு முறை கல்கிஸ்ஸை பொலிசார் சோதனையிட முயன்றுள்ளனர்.

இரவு சண்டே டைம்ஸ் ஆசிரியர்,பாராளுமன்ற உறுப்பினர் ஜெயாநந்த மூர்த்தி ஆகியோர் சிவராமின் வீட்டில் இருந்த போதே இந்த முற்றுகை இடப்பட்டுள்ளது.

எனினும் சிவராமின் வீட்டை சோதனையிட வேண்டும் என்ற பொலிசாரின் கோரிக்கைக்கு குறிப்பிட்ட மூன்று ஊடகவியலாளர்களும் இடம் தரவில்லை. இதனையடுத்து தமது நோக்கம் நிறைவேறாத நிலையில் பொலிசார் திரும்பிச் சென்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(32)

# கொடூர வன்முறைகள் மூலம் இனவாதிகள் எதிர்பார்த்த விளைவைப் பெறமுடியவில்லை

ஒன்றரை நூற்றாண்டு வரை இலங்கையில் நிலைகொண்டிருந்த ஆங்கிலேயர் 1948 இல் சிங்கள அரசியல் வாதிகளிடம் ஒரு தலைப்பட்சமாக அதிகாரத்தை கையளித்து மாபெரும் வரலாற்று தவறைப்புரிந்தனர். அன்றுதொட்டு தமிழ்த்தேசிய இனத்தை பல வீனப்படுத்த சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்துக்கொண்ட ஆயுதம், வன்முறை அதன் உச்சக்கட்டம் தான். 1983 யூலைக் கலவரமாகும்.

ஆட்சி புரிந்த அரசாலும், அதிகார முற்றவர்களாலும் திட்டமிட்டு மேற் கொள்ளப்பட்ட யூலைக்கலவரத்தில் பாதிப் புக்களில் இருந்து தமிழ் மக்கள் இன்னமும் மீளவில்லை.

தமிழ் மக்கள் மீது குற்றம் புரிந்த அரசு இருபது வருடமாகியும் அதற்கான பாவமன்னிப்பை தேடிக்கொள்ளவில்லை.



தென்னிலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள் அரசால் மிக தீவிரமாக திட்டமிட்டு நடாத்தப்பட்ட இனப்படுகொலையாகும். அத்துடன் தமிழரது சொத்துக்கள் சூறையாடப்பட்டன. எரிக்கப்பட்டன. தென்னிலங்கையில் இருந்து தமிழாகளை முற்றாக வெளியேற்ற அரசு முயற்சிதது. அன்று நடந்த மிகப்பெரும் துயரமே இன்று நாடு பிளவுண்டு போவதற்கு காரணமாக அமைந்தன. அதற்குரிய முழுப்பொறுப்பும் ஆட்சியாளர்களை சார்ந்திருக்கிறது என்பது வெளிப்படையான உண்மையாகும்.

திருநெல்வேலிச் சந்தியில் நடைபெற்ற விடுதலைப்புலிகள் தாக்குதலில் கொல்லப்பட்ட 13 இராணுவத்தினரது பூதவுடல் 23 ஆம் திகதி பிற்பகல் பொறளையில் அடக்கம் செய்யும் நிகழ்வு இடம் பெற்றது.

1983 யூலை 23 ஆம் நாள் நள்ளிரவு கொழும்பிலிருந்து ஆறு மைல்கள் தொலைவில் உள்ள திம்பிரிகஸ்சாயா நகரில் தமிழரது பத்துக் கடைகள் வன் முறையாளர்களால் தீயிட்டு கொழுத்தப்பட்டன. அதுவே முதல் தொடக்கம்.

திருநெல்வேலியில் 13 இராணுவத்தினர் கொல்லப்பட்டதனால் தான் கொழும்பில் கலவரம் வெடித்தது என்று சொன்னால் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் 1983 யூலை 20 ஆம் திகதி அரசு செய்தித் தணிக்கையைக் கொண்டு வந்திருந்தது. தமிழர்களுக்கெதிரான வன்முறையின் எதிர்விளைவுகளை வெளியே தெரியாமல் மறைப்பதற்காகவே அவ்வாறு தணிக்கையைக் கொண்டு வந்தது. இது ஏன் இங்கே குறிப்பிடப்படுகிறது என்றால் நிச்சயமாக திருநெல்வேலித் தாக்குதலினால் கலவரம் உண்டாகவில்லை. திட்டமிட்டுத் தமிழர்களை தாக்கி அடிமைப் படுத்துவதற்காக வன்முறைக் கும்பல்களை உருவாக்கி தாக்குதல் நடாத்த தயார் நிலையில் அரசு இருந்து வந்துள்ளது என்பதை அறியமுடிந்தது,

ஆடி பிறந்தால் கொழும்பில் ஆடிவேல் விழா களைகட்டத்தொடங்கி விடும் கோட்டையிலிருந்து தெகிவளை வரைக்கும் அது தெரியும். வீதி இருமருங்கும் கரும்புத்தடிகள் கட்டுக்கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் கண்கொள்ளாக்காட்சியைக் காணலாம். அந்தக் கரும்பு தடிகளாலேயே தமிழர்கள் அடித்து நொருக்கி எரியும் நெருப்பில் உயிரோடு போடப்பட்டார்கள். திம்பிரிகஸ் சாயாவில் நள்ளிரவில் தொடங்கிய வன்முறை அதிகாலை விடிந்தபோது தென்னிலங்கை எங்கும் பரவியது. காலை 9.10 மணியளவில் கொழும்பு மாநகர்ப்பகுதியில் இருந்து கிளம்பிய புகை வானத்தை தொட்டு நின்றது. ஆம் தமிழர்களின் சொத்துக்களுக்கு சிங்கள காடையர்கள் அரச பாதுகாப்புடன் தீ மூட்டினர். கொழும்பில் அரசு மூட்டிவிட்ட காடைத்தனம் தென்னிலங்கை பெரிய நகரங்கள் எங்கும் எதிரொலித்தன என்றுமே கண்டிராத உயிரிழப்புக்களையும் உடமைகள் இழப்பையும் தமிழ் இனம் எதிர்கொண்டது.

இந்த வன்முறை இந்திய வெளிவிவகார மந்திரி நரசிம்மராவ் இலங்கைக்கு வருகை தரும் வரை நீடித்தது. அந்த ஏழு நாட்களுக்குள் தென்னிலங்கையில் தமிழினம் பட்ட அவலம் மிகவும் துயரமிக்கவையாகும்

யூலை 24, 25 ஆம் திகதிகளில் தமிழர்களது தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள் உடமைகள் சூறையாடப்பட்ட போதும், தீவைக்கப்பட்டபோதும் அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய அதிகாரிகளே மௌனமாகப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். அதனால் வன்முறையில் ஈடுபட்டோருக்கு அது மேலும் உற்சாகத்தைக் கொடுத்தது.

## கறுப்பு யூலை நினைவாக......

யூலை 25 காலி வீதி ஒரே வாகன நெருககடி அந்த இடத்தை விட்டகல மணித்தியாலயக் கணக்கில் நேரம் எடுத்தன. வந்த வாகனங்களில் தமிழர்கள் இருந்ததால் அந்த இடத்திலே வாகனத்தை விட்டு இழுத்தெடுத்து எரியும் நெருப்புக்குள் போட்டார்கள் தமிழருக்கு சொந்தமாக எது இருந்ததோ அனைத்தும் கொளுத்தப்பட்டன.

ஆனால் இதுதொடர்பாக அரசசார்பில் இருந்து யாரும் வாய்திறக்கவில்லை அரசுத் தலைவர்களோ அமைச்சரவைச் சகாக்களோ யாரும் தமிழர்கள் மீது கட்டவிழ்த்த வன்முறைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு, நிறுத்துமாறு வேண்டுகோள் விடுக்கவில்லை என்பதை இங்கு அனைவரும் கவனத்தில் கொள்வது ஏற்புடையதாக இருக்கும்.

புதிய மகசீன், வெளிக்கடைச்சிறச்சாலையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் இளைஞர்கள் கோரமாக கொலை செய்யப்பட்டனர்.

தமிழீழம் மலர்வதை ஆவலுடன் காணக் காத்திருந்த அந்த இளைஞனின் கண்கள் தோண்டப்பட்டும் தலைகள் வெட்டிச்சாய்க்கப்பட்டும், கூரிய ஆயுதங்களால் குத்திக் குதறப்பட்டும் அந்தக் கோர நிகழ்வு சிறைக் காவலர்களின் அனுசரணையுடன் நடைபெற்றதாக ஆணைக்குழுவே உறுதி செய்துள்ளது.

குட்டிமணி, ஜெகன், தங்கத்துரை போன்ற இளைஞர்கள் யூலை25ஆம் திகதி கொல்லப்பட்டனர். ஏனையோர் 26ஆம் திகதி கொல்லப்பட்டனர். அரசு வன்முறைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதற்கு 26ஆம்திகதி நடைபெற்ற சிறையில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளின் படுகொலை எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

தென்னிலங்கை மற்றும் மலையகப் பகுதிகளெங்கும் தமிழர்கள் அடித்து நொருக்கப்பட்டும், உயிரோடு எரிக்கப்பட்டும், உடைமைகளை இழந்து உடுக்க உடையின்றி உண்ண உணவின்றி ஆலயங்களில் தஞ்சம் புக நேர்ந்தபோதும் வன்முறைகளை காடைத்தனத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுப்பதையும் அரசுமுற்றுமுழுதாக புறக்கணித்திருந்தது. பெரும் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியது. ஆயினும் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் ஆலயங்கள் பொது இடங்களில் தஞ்சம் அடைந்தவர்களை கூட வன்முறையாளர்கள் கோரத்தனமாகத்தாக்கினார்கள் என்பது தான்.

1977,1983 காலப்பகுதியில் தமிழர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஜே.ஆரும், பிரேமதாசாவும் தமிழர்களின் வணிகநிலையங்களுக்கும், வாழ்விடங்களுக்கும் படியேறி வாக்குகளைப் பெற்று ஆட்சிப்பீடமேறினார்கள். பதவிகளை பிடித்துக் கொண்டார்கள், அவர்களே தமிழர்களின் வாழ்விடங்கள் வன்முறையாளர்களால் தீக்கிரையாக்கப்பட்டு புகை வெளிக்கிளம்பி வானத்தை நோக்கி செல்வதை வேடிக்கைப்பார்த்துக் கொண்டு நின்றனர் என்றால் தமிழ் மக்களால் மன வெறுப்பை எவ்வாறு சீர்செய்ய முடியும்.

1948இல் மலையகமக்களின் நாட்டுரிமையை பறித்தார்கள். 1958இல் தமிழர்களின் மொழியுரிமையை பறித்தார்கள் இலங்கை ஒருபல்லின பன்மைத்துவ சமூகநாடு என்பதை மறந்து இலங்கை பௌத்த சிங்கள நாடாக மாற்ற டி.எஸ் சேனாயக்க முதல் சந்திரிகா அம்மையார் வரை விடாப்பிடியாகவுள்ளனர்.

1983இல் ஜே.ஆர் விட்ட மாபெரும் தவறு ஆயுதப்போராட்டத்தை தீவிரமாக்கியது. தென்னிலங்கையில் எந்தவொரு அரசியல் சக்திகளுக்கும் தமிழ் மக்களின் நியாய பூர்வமான அரசியல் அபிலாசைகளுக்கு தீனிபோட முயற்சியெடுக்கவில்லை.

யூலை கலவரத்தால் கொழும்பு கறுப்பாகி இருண்டது. எங்கும் அச்சம், பீதி நிலவியது அடுத்து என்ன நடக்கும் என்ற பீதி அனைவரையும் வாட்டியது.



அப்போது இந்திரா காந்தி பிரதமராக இருந்தார். இலங்கை அரசு வன்முறைகளை உடன் நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். போதிய உதவிகள் வழங்கப்படும் இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் பி.வி.நரசிம்மராவ் கொழும்பு விஜயம் என செய்திவெளியானவுடன் கலவரம் அடங்கியது எனலாம் அதற்குக் காரணம் தமிழர்கள் தாக்கப்படுவதால் இந்தியாவின் கோபத்துக்கு ஆளாகிவிடும் என்ற அச்சங்காரணமோ அல்லது சிறந்த பொருளாதாரக் கொள்கைக்கு ஆபத்து நேர்ந்திடுமோ என அஞ்சியே வன்முறைச் சம்பவங்கள் நடைபெறுவதை அரசு தடுக்க விளைந்தது என கூறப்படுகிறது.

ஐக்கிய இலங்கைக்குள் பல்லின பன்மைத்துவ சமூக மக்கள் வாழ்கின்றார்கள் என்ற நிலையைத் துறந்து இலங்கையை பௌத்த சிங்கள நாடாக்க 1948 இலேயே சிங்கள அரசியல்வாதிகள் உறுதிபூண்டு விடடார்கள்.

1983இல் இரண்டாவது தடவையாக சனாதிபதியாக ஜே.ஆர்.ஜெயவர்த்தனா பதவியேற்றவுடன் தமிழ்தேசிய விடுதலைப் போராட்டத்தை அழிப்பதென முடிவு செய்தார்.

தமிழர் தமது தாயகத்தில் அச்சமின்றி சுதந்திரமாக பாதுகாப்பாக வாழ வேண்டுமானால் அதற்கான ஒரே வழி தமிழீழம் தான் என்பதை 1977 பொதுத்தேர்தல் மூலம் தெரிவித்திருந்தார்கள். தமிழ் மக்களின் எழிச்சி சிங்களப் படைகள் மீதிருந்த ஆத்திரம் காரணமாக தமிழீழ தனியரசை நிறுவ விடுதலைப்போராட்டத்தை முழு வீச்சாக தமிழ்மக்கள் ஆதரித்தார்கள்.

ஜே.ஆர்.ஜெவர்த்தனா, ஆர்.பிரேமதாசா அத்துலத்முதலி போன்ற தலைவர்கள் தமிழ் மக்களை பயமுறுத்தி அடிபணிய வைக்க முயற்சியில் இறங்கினார்கள். எவ்வளவுதூரம் தமிழினப் படுகொலைகளை மேற்கொள்ள முடியுமோ, எவ்வளவு உடைமைகளை நாசமாக்க முடியுமோ, அவ்வளவு கால அவகாசத்தை 83இல் ஏற்பட்ட கலவரத்துக்கு வழங்கினார் ஆனால் நடந்தது வேறு.

ஜே.ஆர் கனவுகள் நிறைவேற வில்லை தமிழர்களை அடிபணிய வைக்க முடியவில்லை. தென்னிலங்கையில் தமிழர்களின் தொழிற்பாடுகளை கட்டுப்படுத்த முடியவில்லை. தமிழர்கள் அஞ்சி, நடுங்கி தனது காலடியில் விழுவார்கள் என எதிர்பார்த்தனர். ஆனால் ஆயுதப் போராட்டம் அபரீத வளர்ச்சி பெற்றது.

தமிழ்த் தேசிய இனத்தின் எழுச்சியும், விடுதலைப் போராட்டத்தின் வளர்ச்சியும் 83 கலவரத்துக்கு பின் ஏற்பட்டது என கூறலாம்.

தமிழர்களுடைய வாழ்வை வேரோடு பிடுங்கி எறியச் சிங்கள ஆட்சியாளர்கள் முற்பட்டபோது இதில் முற்றுமுழுதாக தோற்று விட்டனர்.

தமிழரது மனங்களில் ஆழமான பதிவை ஏற்படுத்திய யூலைக் கலவரம் தமிழ் தேசியத்தின் எழுச்சிக்கு வித்திட்டுள்ளது. இன்று விடுதலைப்போராட்டம் உச்சநிலையை அடைந்து. தமிழர் தமக்கென தனியரசை அமைக்கும் நிலைக்கு உயர்ந்துள்ளனர் என்பது இன்று யதார்த்தமா கிவிட்டது.

தாயகக்கோட்பாட்டை நிலைநிறுத்தும்

-----கலி-----

நிலம், மொழி, படை, கலை, பண்பாடு, பொருண்மியம் உடைய இனமாக இன்று தமிழர்கள் தலைநிமிர்ந்து நிற்கின்றார்கள். இவற்றை வழிநடத்த மாபெரும் தலைவனாக மேதகு.வே.பிரபாகரன்அவர்கள் தோன்றியுள்ளார். ஆதலால் சிங்கள ஆட்சியாளர்கள் இனி ஒரு கலவரத்தை தொடங்க மாட்டார்கள் என்பது ஆய்வாளர்களின் கருத்தாகும்.

# மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாணசபை

## வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம்
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

# பிரதி திட்டப்பணிப்பாளர் பதவி

திருகோணமலையிலுள்ள வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்ட முகாமைத்துவப்படுத்தும் பிரிவில் உள்ள பிரதி திட்டப் பணிப்பாளருக்கான வெற்றிடத்தை நிரப்புவதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பிக்கும்போது விண்ணப்பதாரர் 40 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். 55 வயதுக்கு குறைந்தோருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நியமனங்கள் திருப்திகரமான சேவையினடிப்படையில் வருடாந்தம் புதுப்பிக்கக்கூடிய மூன்று வருட ஒப்பந்த அடிப்படையிலாகும். அவ்வொப்பந்தம் திருப்தியினடிப்படையில் மேலும் நீடிக்கப்படும். திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு வடக்கு,கிழக்கு மாகாணங்களில் அதிகளவு பயணம் செய்ய வேண்டும்.

### விண்ணப்பிக்கும் முறை:-

விண்ணப்பதாரிகள் அவர்களது கல்வித்தகைமை, தொழில்சார் தகைமைகள், பிறந்த திகதி, முன்னைய தொழில் விபரங்கள், முன்னைய அனுபவம், இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர்கள், முகவரிகள், சுய தரவுகள் மற்றும் சான்றிதழ்களின் பிரதிகள் உட்பட விண்ணப்பத்தினை அவர்களாகத் தயாரிக்க வேண்டும். விண்ணப்பம் பதிவுத்தபால் மூலம் 10.08.2004 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திட்டப்பணிப்பாளர், வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தித் திட்டம் (NECORD) இல.140, மின்சார நிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரியில் கிடைக்க வேண்டும். அரச திணைக்களம் /அரச கூட்டுத்தாபனங்கள் /சபைகள் என்பவற்றில் சேவையிலிருப்போர் அவர்களது நிறுவனத் தலைவரினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.

### தெரிவுசெய்யப்படும் முறை:-

நேர்முகப் பரீட்சையொன்றின் மூலம் தெரிவுசெய்யப்படுவர்.

### சம்பளம்:-

நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் 2000.12.26ஆம் திகதியிடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் சுற்று நிருபம் இல.10 இன் 04 மற்றும் 05ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் விண்ணப்பதாரியின் தகைமைகள் மற்றும் அனுபவத்தின் அடிப்படையில் பேசித் தீர்மானிக்கப்படலாம்.

### கடமைகளும் பொறுப்புக்களும்

விசேடமாக இதற்குப் பொறுப்புடையவர் பின்வரும் விடயங்களில் திட்டப் பணிப்பாளருக்கு உதவ வேண்டும்.

- திட்ட முகாமைத்துவப் பிரிவினை திறமையாக முகாமைத்துவப்படுத்தல், அதன் நடவடிக்கைகள் மற்றும் செயல் நிறைவேற்ற மதிப்பீடு என்பவற்றுக்கு ஒத்துழைத்து மேற்பார்வை செய்தல்.
- திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுடன் தொடர்புடைய முறைகள் மற்றும் நடவடிக்கைகளை திறமையாக ஏற்பாடு செய்தல் மற்றும் விருத்திசெய்தல், திட்டநடவடிக்கைகளின் செயல்பாடுகளில் ஒத்துழைத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல்.
- நடைமுறைப்படுத்தலின்போது ஏற்படும் பிரச்சினைகளை உடனே கண்டு அதற்கான தீர்வு நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளல்,
- திட்ட நடமுறைப்படுத்தலுடன் சம்பந்தப்பட்ட வெளிநாட்டு நிதி முகவரகங்கள் மற்றும் ஏனைய பங்குதாரர்களுடன் கிட்டிய நட்புறவினை ஏற்படுத்தி பேணி வர வேண்டும்.
- திட்டப்பணிப்பாள ரின் வேண்டுகோளின்படி வழங்கல் ஆவணம் மற்றும் அறிக்கைகள் தயாரிக்க வேண்டும்.

### தேவையான தகைமையும் அனுபவமும்

பொறியியல், விஞ்ஞானம், சட்டம், பொருளியல், வர்த்தகம், விவசாயம், வியாபார நிர்வாகம்/முகாமைத்துவம், கணக்கியல் அல்லது வேறு ஏதாவது துறையில் பட்டமொன்றுடன் வெளிநாட்டு நிதி நிறுவனங்களினால் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிரேஷ்ட முகாமைத்துவத்தரத்தில் 08 வருடங்களுடன் 12 வருட அனுபவம் பெற்றிருத்தல் விரும்பத்தக்கது.

அல்லது

குறிப்பிட்ட துறையில் பட்டம் மற்றும் பட்டப்பின் படிப்புத் தகைமை (கலைமாணி/ டிப்ளோமா) அல்லது குறிப்பிட்ட துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் சார் நிறுவனம் ஒன்றின் கூட்டு அங்கத்துவத்துடன் வெளிநாட்டு நிதிமுகவரகங்களில் நிதியிடப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்துவதில் ஐந்து வருடங்கள் உட்பட 08 வருடங்கள் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

### தொழில்சார் திறமைகள்

*சிக்கலான மற்றும் மாறுபட்ட நடவடிக்கைகளுடனான திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கான திறமை.
*திட்டத்தின் நீண்ட கால நீடித்த தன்மையை உறுதிசெய்வதற்கான திறமையான நடைமுறைப்படுத்தலுக்கு பங்கு தாரர்களின் பங்களிப்பு மற்றும் ஒத்துழைப்பு என்பனவற்றை ஊக்குவிப்பதற்கான திறமை.
*பலதரப்பட்ட ஒழுக்காற்றுக்குழுக்களின் வேலைகளை திறமையாக ஏற்பாடு செய்து முன்னெடுத்துச்செல்லும் திறமை.
*திட்ட நடைமுறைப்படுத்தல் விடயங்களை ஆராய்ந்து தீர்ப்பதற்கான திறமை.
*திறமையான தொடர்பாடல் மற்றும் கலந்தாலோசிக்கும் திறமை மற்றும் சிறந்த தனிப்பட்ட தொடர்புகள் இருத்தல் வேண்டும்.
*அ ரசாங்க நடைமுறைகள் மற்றும் விதிகள் பற்றி போதிய அறிவுடையவராய் இருத்தல் வேண்டும்.
*கணினி அறிவு பெற்றிருத்தல்
*ஆங்கிலத்தில் எழுதவும், கதைப்பதற்கும் உயர் மட்டதேர்ச்சி இருத்தல்.

சி.ரங்கராசா,

பிரதம செயலாளர், வடக்கு கிழக்கு மாகாணம், உள்துறைமுக வீதி, திருகோணமலை.

(சி.10035)

# போர்த்துக்கேயர் புரிந்தசீரழிவுகளை பரிசீலனை செய்ய அரசு குழுஅமைக்கும்

## இழப்பீடு கோரவும் முடிவு

1505ஆம் ஆண்டு தொடக்கம் 1640 ஆண்டுவரை இலங்கையில் ஆட்சி செய்த போர்த்துக்கேயர் நாட்டின் கலாசாரத்தையும், நாட்டின் உரிமைகளையும் சீரழித்துள்ளனர். இவைகளை பரிசீலனை செய்வதற்கு குழுஒன்று நியமிக்க போவதாக ஜே.வி.பி பாராளுமன்ற கலாசார அமைச்சா் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

போர்த்துக்கேயர் இந்த நாட்டை அடிமைப்படுத்தி, நாட்டின் வழங்களை கொள்ளையடித்துசென்றுள்ளனா. 1505ஆம் ஆண்டு ரொ ஹென்சூத அல்மேதா காலிக்கடல் பரப்பில் வந்திறங்கி உள்ளனர் எனவும் அதன்பின் அவர்களின் கலாசாரங்களை இந் நாட்டு மக்கள் பின்பற்றிய படியால் இந்நாடு சீரழிந்துள்ளது. அந்நாட்டிடமிருந்து இழப்பீடு கோரப் போவதாக அமைச்சர் தெரிவித்துள்ளதுடன் அக் குழுவிற்கு பேராசிரியர் பரணவித்தான ஒல்கொட் குணசேகர, பேராசிரியர் விமலரத்ன, பேராசிரியர் லோனாதேவராஜா மற்றும் பாராளுமன்றத்திலிருந்து ஏழு அங்கத்தவர்களும் நியமிக்கப் படவுள்ளனர் என்றும அவர் கூறியுள்ளார்.

# நிறுத்தலளவைக் கருவிகளுக்கு முத்திரையிடல்

பூநகரிப் பகுதியில் பயன்பாட்டிலுள்ள அனைத்து நிறுத்தலளவைக் கருவிகளையும் சரி பார்த்து முத்திரையிடும் செயற்பாடு கடந்த 22ஆம்திகதி ஆரம்பிக்கப்பட்டது. இது எதிர்வரும் 30ஆம் திகதி வரைவாடியடி, பூநகரி நிறுத்தலளவைப்பிரிவுச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

நிறுத்தலளவைக் கருவிகளை பயன்படுத்தும் அனைவரும் குறித்த நாளிற்குள் அவற்றை முத்திரையிட்டுக் கொள்ளுமாறு நிறுத்தலளவைப்பிரிவு வருவாய்ப் பகுதியினர் கேட்டுள்ளனர்

# அரசுடன் இணைய இ.தொ.கா.முடிவு

## ஆடி முடியும்வரை பொறுத்திருப்பு

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் இணையும் முடிவுக்கு பெரும்பாலும் வந்துள்ள போதும் ஆடிமாதம் முடியும் வரை காத்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இ.தொ.கா.தலைவர் ஆறுமுகம் தொண்டமானுக்கும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் இடையில் கடந்த வியாழனன்று இடம்பெற்ற சந்திப்பில் இரு அமைச்சர் பதவிகள், இரண்டு பிரதியமைச்சர் பதவிகள்மற்றும் மத்தியமாகாண சபைப்பிரதித் தலைவர் பதவி 2 அமைச்சர் பதவிகள் ஒரு போனஸ் ஆசனம் மூலமான மாகாணசபை உறுப்பினர் பதவி என்பனவற்றை இ.தொ.கா. விற்கு வழங்க இணக்கம் காணப் பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

எனினும் இவ்வாறு அரசாங்கத் துடன் இணைவதற்கு இ.தொ.கா. வில் யோகராஜன் போன்றோர் எதிர்ப்புத் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்கவுடன் இடம்பெற்ற பேச்சுவார்த்தையையடுத்து உடனடியாக ஆறு முகம் தொண்டமான் இந்தியா சென்றுள்ளதாகவும்தெரியவருகிறது. (32)

# சிறிலங்காவில் டெங்கு ஒழிப்பு வாரம்

(கொழும்பு)

டெங்கு ஒழிப்பு வாரம் நேற்று முன்தினம் முதல் நாடளாவிய ரீதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா சனாதிபதியினதும் பிரதமரினதும்.தலைமையின் கீழ் இதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுகின்றன.இதனை முன்னிட்டு அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் தமது முழு ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அரசாங்கம் கேட்டுள்ளது.

டெங்கு ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு பாடசாலைகள் மற்றும் வேலைத்தளங்களில் சிரமதான பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

டெங்கு பரவலை தடுப்பதற்கு இயற்கையான தடுப்பு முறைகளை கைக்கொள்வதே சிறந்தது எனக் கூறும் சுகாதார சேவையினர், அதனை உரிய வகையில் மேற் கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தற்சமயம் நாட்டில் பரவியுள்ள டெங்கு நோயின் காரணமாக 60 பேர் உயிரிழந்தனர். மேலும் 9819 பேர் டெங்கினால் பாதிக்கப் பட்டுள்ளனர். (32)

# கருணாவை கூட்டிச் செல்லவில்லை

## அநுரா பண்டார நாயக்க மறுப்பு

கருணாவை கைத்தொழில் சுற்றுலா முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுராபண்டார நாயக்கவே சிங்கப்பூரிற்கு அழைத்துச் சென்றாரென வெளியான செய்தியை அநுரா மறுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் சீனாவிலிருந்து கருத்துத் தெரிவிக்கையில்;

இச் செய்தி முற்றிலும் தவறானதெனவும், கருணா என்ற பெயருடையவரை தான் ஒரு போதும் சந்திக்கவோ,காணவோ அல்லது கதைக்கவோ இல்லையெனத் தெரிவித்துள்ளார். கருணா புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்படுவதற்கு முன்னரோ அல்லது இப்போதோ அவருடன் எவ்வித தொடர்பும் இல்லை யென அநுரா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

இதேவேளை இனம் தெரியாத நபர்களை எந்தவோர் நாட்டிற்கும் நான் அழைத்துச் சென்ற சம்பவம் இல்லையென மேலும் தெரிவித்துள்ளார். அநுரா சீனாவிற்கு செல்கின்ற வழியில் சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு சிங்கப்பூரில் தரித்து நின்று சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### பிக்குகளை அகற்ற முடிவு

ஹெலஉறுமய கட்சியில் அங்கம் வகிக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய எல்லாவெல மெத் தானந்ததேரர்,செயலாளர் அத்துரலியரத்னதேரர், ஓமல்பே சோபித் தேரர் ஆகியோர் தேசிய பௌத்த சம்மேளனத்தில் அங்கம் வகிக்க முடியாதென சங்கத்தின் தலைவர் ஞானசாரதேரர் இம்மாதம் 22 ஆம் திகதி அறிவித்துள்ளா.


## கோடைகால ஜில்சொப்பிங்

* முகூர்த்தப்பட்டுச் சாறிவகைகள்
* வெளிநாடுகளில் இருந்து உடனுக்குடன் இறக்குமதி செய்யப்பட்ட நவீன டிசைன்களில்
* சாறிவகைகள் * சேட்,T.சேட் * சூட்வகைகள்
* ஜம்பர்வகைகள் * ரவுசர்த்துணிவகைகள் * கவுண்வகைகள்
* டெனிம், சோக்கோ ரவுசர் வகைகள் * கோட்சூட்
* ஸ்கேட் & பிளவுஸ் வகைகள் * பேபி கவுண் வகைகள்

போன்றவற்றை

மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ள

மிலேனியம் பெஷன் & பொம்பே பஜார்

T.P.:0214590174

இல.10,மின்சார நிலைய வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம். (சி.9757)


## 13ஆம் ஆண்டு நீங்காத நினைவு...

தாயின் மடியில் 1969 - 06 - 12



தாயக மண்ணில் 1991 - 07 - 25

### வீரவேங்கை அகிலன்

(வேலுப்பிள்ளை கந்தசாமி)

கோவில் புளியங்குளம், நெடுங்கேணி.

சம்பவம்:- ஆனையிறவு முகாம் தாக்குதலின்போது

சின்னக்குருவியென எங்கள் வீட்டு முற்றம்
வந்திறங்கிய அன்புக்குருவியே - எங்கள் அகிலனே
சொல்லாமல் எங்கேயடா தொலை தூரம்
சென்று விட்டாய்
அல்லும் பகலும் எங்கள் அகிலன் எங்கே
என அழுவதை அறியாயோ?
விடுதலைக்காக சிறகு விரித்த எங்கள்
அன்புப் பறவையே, திரும்பா திசை நோக்கி பறந்துவிட்டாயாம் நம்ப
முடியவில்லையடா
மாவீரா...... மறுபடி பிறந்து வாடா
மறுபிறப்புப் பெடுத்துவாடா..
வற்றாத துன்பத்தை தந்துவிட்டு சென்றுவிட்ட எங்கள் தெய்வமே!
உன்னை கல்லறையில் வைத்து கண்ணீர் வடிக்கின்றோமடா.
அகிலன்... அன்று நீ ஆனையிறவில் வீழ்ந்தாய்
இன்று நாம் ஆனையிறவில் ஏறி நடக்கிறோம்.
நீ வீழ்ந்து 13 ஆண்டுகள் ஓடியும் நேற்றுப் போல் உள்ளது.
உனது நிகழ்வு இலட்சிய நிகழ்வு
விடுதலைக்காக வீழ்ந்த விடுதலைக் குயிலே
நீ வீழ்ந்த இடமும் - எழுந்த இடமும் புனிதமானதடா.
கலங்காது கண்ணுறங்கு - உன் கனவு நனவாகும்.
எங்கள் நினைவு உன்னோடு வாழும்.

முகவரி:
கோவில் புளியங்குளம்,
நெடுங்கேணி. (4840)

தகவல் :
சகோதரன்
வே. விக்னேஸ்வரன்
உன்பிரிவால் வாடும்
குடும்பத்தினர்


இந்தியப் பரம்பரைச் சோதிடர் மணிசாமி அவர்கள் யாழ்ப்பாணம் வருகை



ஸ்ரீசோட்டாநிக்கரை பகவதி அம்மன் அருள் பெற்ற ஸ்ரீ வெட்காளியம்மாவின் அருந்தவப் புதல்வன் மீண்டும்

P.T.R., சாமி இரட்டையர்கள

யாழ்ப்பாணம் புண்ணிய பூமிக்கு வருகை .

கைரேகை, ஜாதகம், எண்கனிதம், நினைத்த காரியம் பார்க்கப்படும். திருமணத் தடங்கலா? காதல் தோல்வியா? தீராத வியாதியா? உயர்கல்வியில் தடங்கலா? கடன் தொல்லையா?தொழில் முன்னேற்றத் தடங்கலா?புதிய தொழில் தொடங்க வேண்டுமா?குழந்தைப்பாக்கியம் இல்லையா? வெளிநாடு செல்லத் தடையா?

ஸ்ரீ பாலாஜி வீடுதி,
293,கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம், (கன்னாதிட்டிச் சந்தி அருகில்)
(33885) (11-184-26)
தொலை.பே.222-2341
(பார்வையிடும்நேரம் 9.00மணிமுதல் 5.00 மணிவரை.)
(சி.9758)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 1973 - 12 - 15



உதிர்வு 2004 - 06 - 11

### செல்லத்துரை சுரேஸ் (நளின்)

(25.07.2004)

பாசத்தின் உறவிடமாய் - பண்பின் சிகரமாய் தேசத்தின்
ஒளிவிளக்காய் - வாழ்வின் வழிகாட்டியாய் - மலர்ந்த வதனத் துடனும்
மாசற்ற நெஞ்சுடனும் ஊர்புகழும் உத்தமனாய்
வாழ்ந்த உம்மைக் கண்டு பொறுக்காத காலன்...
மின்னாமல் முழங்காமல் வந்த மழைபோல் உம்மை எம்மிடம்
இருந்து பிரித்து எடுத்தனனோ....?

நீங்காத துயருடன் நித்தம் நித்தம் உம் நினைவு...
நீங்கள் இல்லா வாழ்க்கையை நாம் கனவிலும் நினைக்கவில்லை
உங்கள் இழப்பை எம்மால் எப்பொழுதும் ஜீரணிக்க முடியாமல்
உங்கள் நினைவுடனே வாழ்ந்து வருகின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக் கிரியைகளில் நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவிகள், ஒத்துழைப்பு நல்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, மகள்,
குடும்பத்தினர்.

தகவல் : க. பஞ்சலிங்கம்
(மாமன்)
சிவநகர் உருத்திரபுரம்.
(4842)

## ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி -2004

# இந்தியாவை பழிதீர்க்குமா பாகிஸ்தான்? உலக கிரிக்கெட் ரசிகர்கள் ஆவல்



கொழும்பில் நடைபெற்றுவரும் ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இன்று இந்திய பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இதற்காக இரு அணி வீரர்களும் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர். ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் இது வரை சிறிலங்காவுக்கு எதிரான ஆட்டங்களைத் தவிர மற்றைய போட்டிகளில் வெற்றி பெற்றுள்ள இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இப் போட்டி முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது.

உலக கிரிக்கெட் ரசிகர்களை பெரும் எதிர்பார்ப்புக்கு உள்ளாக்கியிருக்கும் இப் போட்டியில் வெற்றிபெற இரு அணிகளும் தீவிரமாகவுள்ளன.

அண்மையில் சொந்த மண்ணில் தங்களை வீழ்த்திய இந்தியாவை இன்றைய ஆட்டத்தில் வீழ்த்தி பழி தீர்க்க பாகிஸ்தான் கடுமையாக போராடுமென எதிர்பார்க்கப் படுகிறது.





அதனை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் இந்தியாவும் பந்து வீச்சு, துடுப்பாட்டம் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் வீரர்களை இன்றைய போட்டியில் களமிறக்க முடிவுசெய்துள்ளது. அதன்படி தற்பொழுது பந்து வீச்சில் சிறந்து விளங்கும் பாலாஜி, பதான், நெஹ்ரா ஆகிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுடன் சுழல்பந்துவீச்சாளர் கும்ளேயும் களமிறக்கப்படுவாரெனத் தெரிவிக்கப்படுகிறது. எனவே இன்றைய ஆட்டம் ரசிகர்களுக்கு நிச்சயம் ஒரு விருந்தாக அமையுமென எதிர்பார்க்கலாம்.

# இந்தியா-பாகிஸ்தான் அணிகள் மோதல் அக்தரை எதிர்கொள்ள வீரர்கள் தயார்



ஜோன் ரைட்

பாகிஸ்தான் வீரர் சொகைப் அக்தரின் பந்துவீச்சைச் சமாளிக்க இந்திய வீரர்கள் தயாராக உள்ளனர் என்கிறார் இந்திய அணிப்பயிற்றுநர் ஜோன் ரைட். இந்திய, பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஆசியக் கோப்பை சூப்பர் லீக் கிரிக்கெட் ஆட்டம் கொழும்பு பிரேமதாஸா மைதானத்தில் இன்று பகலிரவாக நடைபெறுகிறது. இந் நிலையில், பாகிஸ்தானில் நடைபெற்ற தொடரில் சரியாகப்பந்து வீசாத அக்தர், அக்குறையைப் போக்கும் நோக்கில் இந்தியாவுடன் விளையாடுவாரோ எனக் கேட்ட போது மேற்கண்ட கருத்தைத் தெரிவித்துள்ளார் ரைட்.

அக்தரின் வீச்சை பாகிஸ்தானிலேயே இந்திய வீரர்கள் சிதறடித்து சிறப்புப் பெற்றனர். இங்கும் அவரது வீச்சைச் சமாளிக்கத் தயாராக உள்ளனர். என்றாலும் முதல் 15 ஓவர்கள் வரை வீரர்கள் திறமையாக ஆட வேண்டியது அவசியம். மொத்தத்தில் இந்த ஆட்டம் ரசிகர்களுக்கு மட்டுமல்லாது, வீரர்களும் அனுபவிக்கும்படியாக இருக்கும் என்றார் ரைட். இதுவரையிலான 3 ஆட்டங்களில் இரண்டில் இந்தியா வெற்றி பெற்றாலும்,தொடக்க ஜோடி இதுவரை சரியாகச் சோபிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஹர்பஜன் விளையாடுவாரா? ,பாகிஸ்தானுக்கு எதிரான முக்கியமான ஆட்டத்தில் சுழற்பந்து வீச்சாளர் ஹர்பஜன்சிங் விளையாடுவது சந்தேகம் எனத்தெரிகிறது. சுமார் 08 மாத காலத்துக்குப் பிறகு அணியில் மீண்டும் இடம்பெற்று, பங்களாதேஷத்திற்கு எதிரான ஆட்டத்தில் 10 ஓவர்கள் வீசி20 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் பெற்றார் அவர். ஆனால் அந்தத்திறமை போதுமானதாக இல்லாததாக அணி நிர்வாகம் கருதுகிறது.

# ஆசியக்கோப்பை கால்பந்தாட்டம் 3 முறை சம்பியன் சவூதி தோல்வி

ஆசியக்கோப்பைக் கால். பந்தாட்டத்தில் மும்முறை சம்பியன் சவூதி அரேபியாவின் காலிறுதி வாய்ப்புக் கேள்விக்குறியாகியுள்ளது. சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற 'சி' பிரிவுக்கான லீக் ஆட்டத்தில் உஸ்பெகிஸ்தானிடம் தோல்வியுற்றதே இதற்குக்காரணம். ஆட்டத்தின் 12 ஆவது நிமிடத்தில் அடித்த கோலால் (1-0) வெற்றி பெற்ற உஸ்பெகிஸ்தான், இப்போட்டியில் காலிறுதிச் சுற்றை எட்டிய முதல் அணி எனும் பெயரைப் பெற்றுள்ளது. 25 யார் தூரத்தில் இருந்து அலெக்சாண்டர் ஜெய்ன்ரிக் அடித்த பந்து , சவூதியைத்தோற்கடிக்கக் காரணமாக அமைந்தது. இத்தோல்வியை அடுத்து ஈராக்குடனான ஆட்டத்தில் வெற்றி பெற்றால் தான் காலிறுதி ஆட்டத்துக்கு முன்னேற முடியும் எனும் நிர்ப்பந்தம் சவூதி அரேபியாவுக்கு ஏற்பட்டுள்ளது. 1984- ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு முறையும் இறுதிச் சுற்றில் விளையாடிய நாடு எனும் சிறப்பைப் பெற்ற சவூதி அரேபியா அணியின் முக்கிய வீரர்கள் 7 பேர் இல்லாததே உஸ்பெகிஸ்தானுடனான தோல்விக்குக் காரணமென சவூதி அணிப்பயிற்றுனர் ஜெரார்டு வான்டெர்லெம் கருத்துத் தெரிவித்துள்ளார்.




# ஆசியக் கிண்ண கால்பந்துப் போட்டி ஈரான், ஓமான் அணிகள் சமநிலையில்

சீனாவில் நடைபெற்று வரும் ஆசியக் கிண்ணக் கால்பந்துப் போட்டியின் குழு D இற்கான போட்டியில் ஈரான், ஓமான் அணிகள் நேற்று மோதின. இப் போட்டியை இரு அணிகளும் 2-2 என்ற கோல் எண்ணிக்கையில் சமன் செய்தன.

93 ஆவது நிமிடத்தில் ஈரான், பெற்ற கோலின் மூலம் இந்தப் போட்டி சமநிலையில் நிறைவடைந்தது.

# சிறிலங்காவுடனான பாகிஸ்தானின் தோல்வியால் சீற்றம் கொண்டுள்ளார் ஜாவிட் மியன்டாட்



ஜாவிட் மியன்டாட்

அண்மையில் ஆசியக் கிண்ணத்துக்காக நடைபெற்ற சிறிலங்காவுடனான போட்டியில் படுதோல்வியடைந்ததையடுத்து பாகிஸ்தான் அணி மீதும் சம்பந்தப்பட்டவர்கள் மீதும் முன்னாள் டெஸ்ட் அணித் தலைவர் ஜாவிட் மியன்டாட் சீற்றம் கொண்டுள்ளார். இதேவேளை புதிய பயிற்சியாளரை நாம் நியமிக்கும் போது பாகிஸ்தான் அணி சிறப்பான நிலைக்கு வருவதற்கு காலம் எடுக்கும் என்பதை அறிந்தே இருந்ததாகக் கூறிய ரமீஸ் ராஜா தெரிவித்துள்ளார். மேலும் தெரிவிக்கையில்; அணியின் தற்போதைய நிலையைக்கொண்டு அதனை தரக்குறைவாக மதிப்பிடமுடியாது என்றும் கூறியுள்ளார்.

வூல்மர் 3வருட ஒப்பந்த அடிப்படையில் எதிர்வரும் 2007 உலகக்கிண்ணப்போட்டிகள் வரை பணியாற்றுவார். இதற்கிடையில் சில பாகிஸ்தானிய ஊடகங்கள் முன்னாள் வீரர்களிடம் கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளன. வேறொரு வெளிநாட்டுப் பயிற்றுவிப்பாளரை நியமிக்கப் போகிறீர்களா? எனவும் கேள்வி எழுப்பியுள்ளன.

இதனிடையே பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்கு பயிற்றுவிப்பாளராகப் புதிதாக நியமனம்பெற்ற பொப் வூல்மர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருப்பதாக அந்நாட்டு கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

சபையின் நிறைவேற்று அதிகாரியான ரமிஸ்ராஜா ரொய்ட்டருக்குத் தெரிவிக்கும்போது வூல்மர் தமது அணிக்கு அதிக வலுச்சேர்க்கவும் கலாசாரத்தைப்பேணவும் வருகை தந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவு டெஸ்ட் போட்டி மேற்கிந்தியத்தீவு 6விக்கெட் இழப்பிற்கு 371 ஓட்டம்

லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றுவரும் மேற்கிந்தியத் தீவு இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் தனது முதல் இனிங்சிற்காகத் துடுப்பெடுத்தாடி வரும் மேற்கிந்தியத் தீவு அணி ஆறு விக்கெட்டுக்களை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இதில் கிறிஸ்கெய்ல் 66 ஓட்டங்களையும், கிரம்ஸ்சிமித் 45 ஓட்டங்களையும். சர்வான் ஒரு ஓட்டமும்,பிறைன்லாரா 11 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய சந்தர்ப்போல் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஆட்டமிழக்காது 119 ஓட்டங்களைப் பெற்று மேற்கிந்தியத் தீவின் ஓட்ட எண்ணிக்கைக்கு வலுவூட்டினார்.

இதனைவிட பிறைவோ 44, ஜேக்கப்ஸ் 32ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தனர். ஓமரி பான்ஸ் ஆட்டமிழக்காது 23 ஓட்டங்களுடன் சந்தர்ப்போலுடன் இணைந்து ஆடிக்கொண்டிருந்தார்.

மூன்றாம் நாளான நேற்று 371 ஓட்டங்களை ஆறு விக்கெட்டுக்களை இழந்து மேற்கிந்தியத்தீவு பெற்றிருந்தது.

பந்துவீச்சில் ஹொக்காட் 2 விக்கெட்டுக்களையும், ஆஸ்லி ஹைல்ஸ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

இங்கிலாந்து முதல் இனிங்சில் 568 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

# பரிசுத்தொகை நிலுவை வழங்கப்படவில்லை; தகுதிகாண் போட்டியில் பங்கேற்க கென்யா மறுப்பு

ஒரு வருடமாகியும் கடந்த வருடம் நடைபெற்ற உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் பங்கேற்ற போட்டிகளுக்குரியபரிசுத்தொகை நிலுவை இதுவரை வழங்கவில்லையென கென்யகிரிக்கெட்சபை அதிகாரிகள் சர்வதேசகிரிக் கெட்சபையைக் குற்றம் சுமத்தியுள்ளனர். இதன் காரணமாக தற்போது செப்ரெம்பரில் நடை பெறவுள்ள I.C.C மினிஉலகக் கிண்ணப் போட்டிகளுக்கான உகண்டாவுடனான தகுதிகாண் போட்டிகளிலும் பயிற்சிப் போட்டிகளிலும் பங்கேற்க கென்ய வீரர்கள் மறுத்து வருவதாகத் தெரி விக்கப்பட்டுள்ளது. ஆயினும் சபையின் முகாமையாளர் சமி.உபிங்கோ தெரிவிக்கும் போது சர்வதேச கிரிக்கெட் சபையிடமிருந்து பெற்ற அனைத்து நிலுவைகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் தென்னாபிரிக்க வருமானவரி பணிப்பாளர்களின் சிபார்சுகளால் இது தாமதித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.அதேவேளை தென்னாபிரிக்க வருமானவரி திணைக்களம் இவர்களின் வரியை அறவிடுவதா அல்லது ஒத்திப்போடுவதா என்பது பற்றி இறுதி முடிவுஎடுக்கவில்லையென்று கென்ய அதிகாரிகள் வீரர்களிடம் தெரிவித்துள்ளனர்.

# அஸ்ரா கின்னை கிரிக்கெட் போட்டியில் கிளிநொச்சி ம.வி அணிக்கு 10 புள்ளிகள்

கிளிநொச்சியில் நடைபெற்ற அஸ்ரா கிண்ண கடினப் பந்துப் போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணியும் யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயமும் கலந்துகொண்டன.



யாழ். பெரியபுலம் ம.வி அணி

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். பெரியபுலம் மகாவித்தியாலயம் முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றது. இதில் அணித்தலைவர் லதீப் 15 ஓட்டங்களைக் கூடுதலாகப் பெற்றார். பந்து வீச்சில் கிளி. மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த வா. சஞ்சீவன் 7 ஓவர்கள் பந்துவீசி 6ஓட்டமற்ற ஓவர்களை வீசி ஒரு ஓட்டத்தை மாத்திரம்கொடுத்து 4இலக்குகளை வீழ்த்தினார். க. அனு சன் 3 இலக்குகளையும், ம.ஜனகன் 2 இலக்குகளையும், க.சஞ்சீவன் 1 இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி தனது முதல் இனிங்சில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து, 88 ஓட்டங்களைப் பெற்றது. க. அனுசன் மிகச்சிறப்பாக துடுப்பெடுத்தாடி 26 ஓட்டங்களையும் வா. சஞ்சீவன் 16 ஓட்டங்களையும், விதுர்சன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ரவிசாந் 3 இலக்குகளையும் மது, சுதன் 2 இலக்குகளையும் ரகு, நாதன் 3 இலக்குகளையும் வினோஜன் 2 இலக்குகளையும் வீழ்த் தினர்.

தனது இரண்டாவது இனிங்சை ஆரம்பித்த பெரியபுலம் மகாவித்தியாலயம் 8 இலக்குகளை இழந்து ஆட்டநேர முடிவின்போது 87 ஓட்டங்களைப் பெற்றது. சிறப் பாக துடுப்பெடுத்தாடிய மதுசுதன் 45 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பந்து வீச்சில் க. அனுசன் 6 இலக்குகளையும், ம.ஜனகன் 1 இலக்கையும் வீழ்த்தினர். ஆட்டம் சமநிலை என்றபோதும் கிளிநொச்சி மகாவித்தியாலயம் 10.08 புள்ளிகளையும். யாழ். பெரியபுலம் 3 புள்ளிகளையும் பெற்றன.

(லோ)



கிளிநொச்சி ம.வி அணி



**சிந்தனைக்கு**

உலகில் எல்லா விடுதலைப் போராட்டங்களிலும் ஒடுக்கு முறையின் நெருப்பில் குளிப்பது பொதுசனங்களே.

தமிழீழ தேசியத்தலைவர்.


ஈழநாதம்
மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை, கிளிநொச்சி. 25-07-2004

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@ eezhanatham. com


## மற்றவர்கள் கோரும் முன்...

"1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாட்டில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறை மற்றும் பேரழிவுகளுக்காக அதனுடன் சம்பந்தப்பட்ட அரசியல் குழுவினரும் தலைமைத்துவமும் தேசிய ரீதியாகவும் பகிரங்கமாகவும் மன்னிப்புக் கோரவேண்டும் என்ற சனாதிபதி சந்திரிகாவின் அறிவிப்பு அரசியல் உள்நோக்கம் கொண்டதொன்றே ஒழிய மானிடத்தின் உயரிய பண்பின் பாற்பட்ட தொன்றல்ல.

1983 இல் எத்தனை பெரிய கொடூரம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டதென்பது உலகிலுள்ள அனைவருக்கும் தெரிந்ததொன்றே. அத்தோடு இக்கொடூரமானது அன்றைய ஆட்சியாளர்களால் திட்டமிட்டு இழைக்கப்பட்டதென்பதும் சந்தேகத்திற்கிடமற்றதொன்று. ஆகையினால் இதற்காக அன்று தமிழ் மக்கள் மீது இனக்கலவரத்தைக் கட்டவிழ்த்துவிட்டவர்கள் தமிழ் மக்களிடம் பகிரங்க மன்னிப்புக் கோரினால் மட்டும் போதாது, அதற்கான பிராயச்சித்தமும் செய்தல் வேண்டும்.

ஆனால் இம்மன்னிப்புக்கோரலுக்கும் அதற்கான பிராயச்சித்தம் தேடலுக்குமான பொருத்தமான காலம், சூழ்நிலை உருவாகி விட்டதா? என்பது ஒரு புறம் இருக்க, இம்மன்னிப்புக்கோருதலை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுவதற்கு சனாதிபதி சந்திரிகாவிற்கு எத்தகைய தூரம் அருகதை உண்டு என்பது கேள்விக்குரிய தொன்றே.

ஏனெனில் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்திற்கு ஒப்பான செயற்பாடுகள் பலவற்றை சனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்கு எதிராக இழைத்துள்ளார். யாழ்.குடாநாட்டின் மீது படையெடுத்ததன் மூலம் இலட்சக்கணக்கான மக்களின் இடம் பெயர்விற்கும்-அதனுடனான மனிதஅவலத்திற்கும் அதன் முன்னரான, பின்னரான இனப்படுகொலைகளுக்கும் காரணமான சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது நடத்தைகளுக்கு மன்னிப்புக் கோராமல் பிறர் பற்றி எவ்வாறு பேசமுடியும்? அதற்கு எத்தகைய யோக்கியதை அவருக்குக்குண்டு?

சந்திரிகா குமாரதுங்க இவ் இனப்படுகொலைகளை இராணுவம் செய்ததென்றோ. ஏனைய ஆயுதப் படைத்தரப்பினர் செய்தனர் என்றோ தட்டிக்கழித்து விட முடியாது. சமாதானத்திற்கான போர் எனக் கூறிக்கொண்டு புரிந்த படுகொலைகளையும் மனித உரிமை மீறல்களையும் நியாயப்படுத்தவோ அர்த்தம் கற்பித்து விடவோ முடியாது.

இந்த நிலையில் சனாதிபதி சந்திரிகா 1995 இல் இருந்து 2002 ஆம் ஆண்டு வரையிலான தமது ஆட்சிக் காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு முதலில் பகிரங்க மன்னிப்புக் கோரல் வேண்டும். இதன் மூலம் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு மன்னிப்புக் கோரும் யோக்கியதை சனாதிபதி சந்திரிகாவிற்கு ஒருவேளைகிடைக்கப் பெறலாம்.

இதனைவிடுத்து சனாதிபதி சந்திரிகா தனது காலத்தில் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளை எல்லாம் மறந்து /மறைத்து ஐ.தே.கட்சியினர் மட்டுமே தமிழ் மக்கள் மீது இனக்கலவரத்தையும் வன்முறையையும் கட்டவிழ்த்து விட்டதாகவும், அவர்கள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கோரவேண்டும் என்பது போன்றும் பேசுவது தமிழ் மக்களுக்கு நகைப்பிற்குரிய தொன்றாகவே உள்ளது.

தமிழ் மக்களைப் பொறுத்து சிறிலங்காவை ஆட்சி செய்த / ஆட்சி செய்கின்ற எவர் பற்றியும் நல்லெண்ணமோ உயர்ந்த அபிப்பிராயமோ கிடையாது. ஏனெனில் அனைவருமே தமிழ்மக்களுக்கு பெரும்கேடு இழைத்தவர்கள், அன்றிப் பெரும் கேடு விழைத்தவர்களுக்கு உறுதுணையாக இருந்தவர்கள்.

ஆகையினால் அவர் வேறு, இவர் வேறு என்று பிரித்துப் பார்ப்பதற்கு எதுவுமே இல்லை. அனைவரும் ஒரேமாதிரியானவர்களே. தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இவர்கள் அனைவரது பங்களிப்பும் இருக்கவே செய்தது. ஆகையினால் இவர்கள் அனைவருமே தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளுக்குப் பிராயச்சித்தம் தேடவேண்டியவர்களே.

ஆனால் சில வேளைகளில் தமிழ் மக்களிடம் இவர்களுக்கு மன்னிப்புக் கோரும் தேவை இதுவரை ஏற்படாது இருக்கலாம். ஆனால் இத்தகையதொரு சூழ்நிலை ஏற்படப்போவதில்லை என யாராவது எண்ணுவார்களேயானால் இதில் அவர்கள் ஏமாற்றமே அடைவார்கள். இதேவேளை சனாதிபதி சந்திரிகா தமிழ் மக்களுக்கு இழைத்த அநீதிகளை அரசியல் ஆக்க முற்பட்டது போன்று இவ் அநீதிகளுக்கு மன்னிப்புக் கோருவதையும் அரசியலாக்க முற்படுவதினால் அவருக்கு பயன் ஏதும் கிட்டி விடப்போவதில்லை. ஏனெனில் சனாதிபதி மற்றவர்களைக் குறை கூறும் முன் தன்னைத் திருத்திக்கொள்ளுதலும், மேம்படுத்திக்கொள்ளுதலும் அவசியமானதாகும்.

# வட,கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசியல்வாதிகள் உடன்பாட்டிற்கு வரவேண்டும்

### புலிகளை எதிர்கொள்ள இது அவசியம் என்கிறார் சிறில.பிரதமர்

தென்னிலங்கை அரசியல்வாதிகள் வடக்கு கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வுகாண ஒரு உடன்பாட்டிற்கு வரவேண்டிய காலம் வந்துள்ளதென்று பிரதமமந்திரி மகிந்த ராஜபக்ஷ கூறியுள்ளார்.

அனுராதபுரத்தில் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்கு இத்தகைய உடன்பாடொன்று அவசியம். நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகத்தினர் நாட்டில் தாங்கள் விரும்பும் எந்தப் பகுதியிலும் வாழ்வதற்கான சூழல் ஒன்றை ஏற்படுத்துவது அனைவரினதும் கடமையாகும் இத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்துவதற்கு சனாதிபதி உறுதி பூண்டுள்ளார்.சர்வதேச. சமூகமும் இந்த அணுகு முறையை ஆதரித்துள்ளது. நாட்டின் சுதந்திரத்திற்கும் இறைமைக்குமாக அனைவருமே சமாதானத்தை நிலைநாட்ட விரும்புகின்றார்கள்.

இதேவேளை தேசிய கலாசார பாரம்பரியத்தை சுபீட்சத்திற்காகப் பாதுகாக்கவேண்டியது மக்கள் அனைவரினதும் கடமையாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளாா.

# கட்டாய மதமாற்றத் தடைச்சட்டத்திற்கு எதிராக உயர் நீதிமன்றில் 6 மனுக்கள்

(கொழும்பு)

கட்டாய மதமாற்றச் சட்டத்திற்கு எதிராக. 6 மனுக்கள் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மதம் மாறுவதற்கு எதிராக பாராளுமன்றில் பிரேரணை கொண்டுவரப்பட்டு அது சட்டமாக்கப்பட வேண்டும் என ஹெல உறுமய உள்ளிட்ட பல கடும் போக்குவாத அமைப்புகள் வலியுறுத்திவருகின்றன. இந்த நிலையில் அரசியல் அமைப்பின் 10ஆம் பிரிவுக்கு அமைவாக பிரஜைகள் எவரும் விரும்பிய மதத்தினைப் பின்பற்றலாம் என்பதற்கு அமைவாக இந்தச் சட்டமூலம் அடிப்படை உரிமைகளுக்கு எதிரானது எனக் குறிப்பிடப்பட வேண்டும் எனக் குறிப்பிட்ட மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான சாசனத்தில் இலங்கை கைச்சாத்திட்டுள்ள நிலையில்இது அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு சட்ட மூலம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் ,மக்கள் தீர்ப்பும் பெறப்பட வேண்டும் எனத்தீர்பளிக்குமாறும் மனுவில் கேட்கப்பட்டுள்ளது. (32)

# திஸ்ஸமாராம வாகனவிபத்தில் 11 பேர் பலி, 8பேர் காயம்

திஸ்ஸமாராம போகா பெலஸ்ஸ பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்து ஒன்றில் 11 பேர் பலியாகினர். மேலும் 8 பேர் காயமடைந்தனர் இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் இடம் பெற்றுள்ளது.

கதிர்காமத்துக்கு சென்றுக் கொண்டிருந்த யாத்திரிகர் சிற்றூர்தி ஒன்றும், கதிர்காமம் திஸ்ஸமா ராமபேருந்தும் நேருக்குநேர் மோதிக் கொண்ட போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. விபத்தில் இறந் தோரில் பெரும்பாலானோர் சிற் றூர்தியில் பயணம் செய்தவர்க ளாவர்.

## ஹெல உறுமய எதிர்ப்பு

பிரதம நீதியரசர் இம்மாதம் 06 ஆம் திகதி இரவு ஒரு பெண்ணுடன் இருந்தார் என்று பொலிசாரினால் புகார் செய்யப்பட்டுள்ளதை அடுத்து அவருக்கு எதிராக எதிர்க்கட்சியினரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள குற்றப் பத்திரிகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஹெல உறுமய விலகியுள்ளது: என ஹெல உறுமய கட் சியின் எல்லாவெல மேதானந்த தேரர் அறிவித்துள்ளார்.

# பாதாளக் குழுவினரிடையே மோதல் மாத்தறையில் துப்பாக்கிச் சூட்டில் 4பேர் பலி

மாத்தறை வீரக்கெட்டிய மொரவேவ பகுதியில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நால்வர் பலியாகினர்.

நேற்று நண்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இனந் தெரியாதோர் இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

துப்பாக்கிதாரிகள் முதலில் முச்சக்கர வண்டியொன்றின் ஓட்டுநர் ஒருவர் மீது தாக்குதலை நடத்தியுள்ளனர். பின்னர் மேலும் மூவரைச் சுட்டுக்கொன்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் வீரக்கெட்டிய பகுதியில் இயங்கி வரும் பாதாள உலக குழுக்களுக்கிடையிலான குரோதத்தின் வெளிப்பாடாகும் என காவல்துறையினர் தெரிவித்துள்ளனர். (32)

## கைதாகி விடுதலை

குச்சவெளிக் கடற் பிரதேசத்தில் சுருக்கு வலையைப் பயன்படுத்தி மீன்பிடித்தொழிலில் ஈடுபட்ட 22 மீனவர்களை பொலிசார் தடுத்து வைத்தபின் விடுதலை செய்துள்ளனர். எனினும் இவர்களின் 7 வலைகளை பொலிசார் பறித்து வைத்துள்ளனர். இதே வேளை கைது செய்யப்பட்ட தமது சக மீனவர்களை விடுவிக்க 500 இற்கு மேற்பட்டவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற்று முன் தினம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

# 200 ஜெலிக்னைட்டுகளுடன் இருவர் பொலிசாரால் கைது

திருமலை கொழும்பு தனியார் சிற்றூர்தியில் பயணம் செய்த இருவரை கந்தளாய் பொலிசார் நேற்று முன்தினம் இரவு கைது செய்துள்ளனர். கந்தளாய் சோதனைச் சாவடியில் சிற்றூர்தியை பரிசோதனை செய்த வேளை 200 ஜெலிக்னைட்டுக்களை பொலிசார் மீட்டுள்ளனர். இது தொடர்பில் சின்னக் கிண்ணியாவைச் சேர்ந்த பாரூக் செரினா முகம்மது கனீபா, முகம்மது றபீக் ஆகியோரை பொலிசார் தடுத்து வைத்துள்ளனர். (32)

# தப்பி யோடும் சிப்பாய்களுக்கு மன்னிப்பு வழங்கப்படமாட்டாது

### சிறிலங்கா இராணுவத் தளபதி தெரிவிப்பு

எதிர்காலத்தில் இராணுவத்திலிருந்து தப்பியோடும் சிப்பாய்களுக்கு மன்னிப்பு வழங்கப் போவதில்லை என புதிய இராணுவத் தளபதி சாந்தகொட்டேகொட தெரிவித்துள்ளார்.

இராணுவத்திலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு மன்னிப்பு வழங்குவது இராணுவத்திற்கு பெரும் இழுக்காகும் என அறிவித்துள்ளதுடன், தலைமறைவாகிய இராணுவத்தினர் மீண்டும் இணைவதற்கு விரும்பினால் அவர்களினால் சமர்ப்பிக்கப்படும் காரணங்கள் பரிசீலிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வெள்ளை யானை கண்டுபிடிப்பு

இலங்கை ஜா-எல காட்டுப் பகுதியில் வெள்ளை யானையொன்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வனவிலங்கு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் இந்த வெள்ளை இன யானையைக் கண்டு பிடித்துள்ளமையை உறுதிப்படுத்தியுள்ளனர். இந்த வெள்ளை யானை கடந்த வாரம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த யானைக்கு 11 வயது இருக்கலாம் எனவும் வனவிலங்கு ஆராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது.

# "தாய் மடியின் தாலாட்டு" இறுவெட்டு நேற்று வவு.இல் சிறப்புற வெளியீடு

(வவுனியா)

வவுனியா மாவட்ட விடியல் இசைக் குழுவினரின் தாய் மடியின் தாலாட்டு பாடல் இறுவெட்டு வெளியீட்டு விழா நேற்று மாலை 4.30 மணியளவில் வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானவேல் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பொது ஈகச்சுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் அவர்கள் ஏற்றி வைத்தார். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியல் துறைதுணைப் பொறுப்பாளர் சோ. தங்கன் அவர்கள் ஏற்றி வைத்தார்.

வவுனியா மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி அலை அவர்களின் வரவேற்புரையினைத் தொடர்ந்து சிறப்புரையினை க.வே பாலகுமாரன் அவர்களும் வெளியீட்டுரையினை கலை, பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை அவர்களும் நிகழ்த்தினர்.

தொடர்ந்து பாடல் இறுவெட்டு வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. தமிழீழ தேசிய எழுச்சிப் பேரவை பொறுப்பாளர் சஞ்சய் இதனை வெளியிட்டு வைக்க தமிழீழ மாவீரர் போராளிகள் குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்து தாய் மடியின் தாலாட்டு இறுவெட்டில் பங்காற்றிய கலைஞர்களுக்கு தமிழீழ அரசியல் துறை துணைப்பொறுப்பாளர் தங்கன் அவர்கள் விருது வழங்கிக் கௌரவித்தார். இந்நிகழ்வைத் தொடர்ந்து மதிப்பீட்டுரையினை அரங்க செயற்பாட்டு ஆசிரியர் திரு. விந்தன் அவர்கள் நிகழ்த்தினார். பதிலுரையினை இசையமைப்பாளரும் பாடகரும் பாடலாசிரியருமான செங்கதிர் நிகழ்த்தினார். தொடர்ந்து விடியல் இசைக்குழுவினரின் இசை நிகழ்வும் நடைபெற்றது. இந் நிகழ்வில் விடுதலைப்புலிகள் உறுப்பினர்களும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களும் பெருமளவான பொது மக்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது (21)



யாழ். இல் நேற்று நடைபெற்ற அங்கவீன முற்றோருக்கான சைக்கிளோட்டப் போட்டியில் கலந்துகொண்டோர்.

# இதயபூமி -1 வெற்றிச்சமரின் 11ஆம் ஆண்டு நிறைவு விழா

(முல்லைத்தீவு)

மணலாற்றில் மண்கிண்டிமலை இராணுவமுகாம் மீது நடத்தப்பட்ட இதயபூமி -1 வெற்றிச்சமரின் 11ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று பிற்பகல் 4.00 மணிக்கு அளம்பில் மாவீரர் துயிலுமில்லத்திற்கு அருகாமையில் நடைபெறவுள்ளது.

1993ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25ஆம் திகதி இம் முகாம் மீது நடாத்தப்பட்ட வெற்றிகரச்சமர் நினைவாக நடத்தப்படும் இவ்விழாவிற்கு கடற்புலிகளின் அளம்பில் பிரதேச அரசியல்துறைப்பொறுப்பாளர் யாழ். மன்னன் தலைமைதாங்குகிறார். (20)

# கறுப்பு ஜூலை வன்முறைகளுக்கு பொறுப்பானோர் மன்னிப்புக் கோருக

## சனாதிபதி சந்திரிகாவின் கோரிக்கை இது

(கொழும்பு)

இந்நாட்டின் வரலாற்றில் கறைபடிந்த ஒரு சம்பவமான கறுப்பு ஜூலையில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களுக்காக அப்போது ஆட்சியிலிருந்த பொறுப்பு வாய்ந்தவர்கள் அனைவரும் மன்னிப்புக் கோரவேண்டுமென சனாதிபதி சந்திரிகா தெரிவித்துள்ளார்.

கடந்த 22ஆம் திகதி கட்டுகஸ் தொட்டை புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த பரிசளிப்பு விழாவில் உரையாற்றிய அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது;

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் இந்நாட்டில் என்றும் மறக்க முடியாத கறைபடிந்த சம்பவங்கள் நடைபெற்றுள்ளது. அதற்காக தான் 50ஆவது சுதந்திரத் தினத்தன்று பகிரங்கமாக மன்னிப்புக் கோரியதை நினைவு கூர்ந்ததுடன் இது தொடர்பில் அப்போது ஆட்சியிலிருந்தோர் அனைவரும் மன்னிப்புக் கோருவதே மனிதாபிமானமானதாகும் என்றார்.

1970ஆம் ஆண்டு வடக்கில் போன்றே தென்பகுதியிலும் பிரச்சினைகள் தோன்றியதாகவும் அதற்கான காரணத்தை அறிய வேண்டுமெனக் கூறிய அவர், கல்விக் கொள்கைகளில் ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகளாலேயே அப்பகுதி இளைஞர்கள் தவறான வழியில் செல்ல நேர்ந்ததாகக் கூறினார். அத்துடன் அவ்வன்முறை காரணமாகவே பெருந்தொகையான கல்விமான்கள்,பொறியியலாளர்கள் சட்டத்தரணிகள், வைத்தியர்கள் என்போர் நாட்டைவிட்டு வெளியேறியதாகவும் அதனால் நாட்டின் முன்னேற்றம் பாதிப்புற்றதாகவும் கூறினார்.

# ரட்ணசிறி விக்கிரம நாயக்க செவ்வாய் வவுனியா வருகை

(வவுனியா செய்தியாளர்)

சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க எதிர்வரும் செவ்வாய்க்கிழமை வவுனியாவிற்கு வருகை தரவுள்ளார்.வவுனியாவிற்கு காலை 9.00 மணியளவில் வந்து சேரும் இவர் வன்னிப் படைகளின் தலைமையகத்தில் படையினரைச் சந்தித்து அவர்கள் மத்தியில் உரையாற்றவுள்ளார். இதன் பின் இவர் தாண்டிக்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் உள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்கும் சென்று நிலைமைகளை அவதானிக்கவுள்ளதுடன், மதியம் ஓமந்தையில் படையினருடன் சேர்ந்து மதிய போசனத்தையும் முடித்துக் கொண்டு, மாலை மன்னாருக்கு செல்வார் என வன்னி இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசிர விஜயசூரிய தெரிவித்துள்ளார். (32,10)

# விடுதலைப்புலிகளுடனான தொடர்பை உலக வங்கி நிறுத்த வேண்டும்

## தேசாபிமானிகள் அமைப்பு வலியுறுத்து

உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கு உதவி வழங்கிவரும் பெரும் நிறுவனமான உலக வங்கி, விடுதலைப்புலிகளுடன் தொடர்பு கொள்வதை நிறுத்த வேண்டும் என்று தேசாபிமானிகள் அமைப்பு கோரிக்கை விடுத்திருக்கிறது.

உலகப்பெரும் நிதி நிறுவனமான உலக வங்கி மக்களால் தேர்ந்தெடுக்கப்படாத அமைப்பு ஒன்றுடன் தொடர்புகளை பேணி அவர்களுக்கு உதவிகளை வழங்க முன்வந்திருப்பது வியப்பை ஏற்படுத்தியிருப்பதாகவும் சிறிலங்காவுக்கான உலக வங்கியின் வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்டுக்கு தேசாபிமானிகள் அமைப்பு, அனுப்பி வைத்திருக்கும் கடிதத்தில் தெரிவித்துள்ளது. இறைமையுள்ள நாடொன்றுடன் மேற்கொள்ளும் தொடர்புகள் போன்றே விடுதலைப் புலிகள் அமைப்புடனும் உலக வங்கி தொடர்புகளைப் பேணி வருவதோடு உலக வங்கியின் செயற்திட்ட அறிக்கைகளையும் உத்தியோகபூர்வ வைபவமொன்றில் அவர்களிடம் கையளித்திருப்பதை தேசாபிமானிகள் அமைப்பு கடுமையாக ஆட்சேபிப்பதாகவும் இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலக நாடுகளின் அரசாங்கங்களுக்கும் பெரும் தொண்டு நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டுவரும் உலகவங்கியின் செயற்திட்ட அறிக்கையை உலகின் பல நாடுகளால் தடைசெய்யப்பட்டிருக்கும் விடுதலைப்புலிகள் அமைப்பிடமும் அதிகாரபூர்வ நிகழ்வொன்றில் வைத்து கையளித்திருப்பதற்கான காரணத்தை இறைமையுள்ள சிறிலங்கா அரசாங்கத்திற்கு தெரிவிக்கவேண்டும் என்றும் தேசாபிமானிகள் அமைப்பு உலக வங்கி வதிவிடப்பிரதிநிதி பீற்றர் ஹரோல்டுக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் தெரிவித்துள்ளது. உலகவங்கியின் நடவடிக்கை தொடர்பான கண்டனக் கடிதத்தில், எல்ல குணவன்ஸ தேரர், கலாநிதி குணதாஸ அமரசேகர,அமைச்சர் அர்ஜூன ரணதுங்க,பேராசிரியர்கள் உபாலி ஜெயசேகர,கிரான்வில் தர்மவர்த்தனஆகியோர் கையொப்பமிட்டுள்ளார்கள்.

# வீரமுனையில் முஸ்லிம் ஒருவர் தனிப்பட்ட விரோதத்தால் கொலை

அம்பாறை மாவட்டத்திலுள்ள வீரமுனைக் கிராமத்தில் தனிப்பட்ட பிரச்சினை காரணமாக முஸ்லிம் குடும்பத்தவரொருவர் அடித்துக் கொல்லப்பட்டிருக்கிறாரென்று தெரிவிக்கப்படுகின்றது. இந்த சம்பவத்தையடுத்து அங்கு பதற்றநிலை காணப்பட்டதாகவும் தற்போது பதற்றநிலைகுறைவடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படு கின்றது. (32)

### இந்தியாவிற்குள்...

என்றும் ஈழவேந்தன் திருப்பவும் அவரது நாட்டிற்குத் தான் போக வேண்டுமென்றும் கூறியுள்ளனர்.

சார்க் அமைப்பின் விதிகளின் படி சார்க் நாட்டில் எந்த நாட்டின் எம்.பியாக இருந்தாலும் அந்த உறுப்பு நாடுகள் மற்றைய நாடுகளுக்கு தடையின்றிச் செல்ல முடியும். அது தான் விதி அவ்விதியின் படி ஈழவேந்தன் அவர்கள் எந்த வித விசாவும் இல்லாமல் இங்கு வரலாம் எனவும் அங்கே சென்றவுடன் அவரை அனுமதித்திருக்க வேண்டும், ஆனால் காரணமெதுவும் கூறாமல் அவரை திருப்பி அனுப்பியுள்ளனர் என்றும் பி.பி.சி செய்தியாளர் தெரிவித்தார்.

அதிகார பூர்வமாக இந்திய அரசின் தரப்பில் எந்த விதமான விளக்கமும் தரப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

### கல்முனையில்...

யிருந்தா ரென்றும் நேற்று அதிகாலை அங்கிருந்து கடத்திச் செல்லப்பட்டு அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளாரென்றும் இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வருகின்ற கல்முனைப் பொலிசார் தெரிவிக்கின்றார்கள். இவரது சடலம் அப்பகுதி சவக்காலை அருகிலிருந்து நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

இதேவேளை மண்டூர், பாண்டிருப்பு கொலைகளுக்கு 9 மில்லிமீற்றர் கைத்துப்பாக்கிகளே பயன்படுத்தப்பட்டிருக்கின்றன எனவும் கொலையாளிகள் யார் என இது வரை அடையாளம் காணப்படவில்லையென்றும் பொலிசார் தெரிவிக்கின்றனர்.

### ஹெல்கேசன்...

குறித்தும் அதனை முன்னெடுப்பது குறித்தும் பேசப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

### மக்கள்...

னர்.இக்குண்டுச் சத்தமானது மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பமாவதற்கான முன்னேற்பாடோ என்ற அச்சத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (10)

### கறுப்பு யூலை...

கடமைகளை நிறைவேற்றி முழுமையான துக்கநாளாகக் கருதி தங்கள் வீடுகளிலும் பொது இடங்களிலும் கறுப்புக்கொடி கட்டி அனைத்துப் போக்குவரத்துக்களையும் நிறுத்தி பூரண கர்த்தாலாக அனுஷ்ரிக்க வேண்டுமென மன்னார் பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டிநிற்கிறது.(மி)

### வெல்லா...

லாவெளிப் பொலிசார் இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். இறந்தவரின்சடலம்மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் பிரேதப் பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது.

### சமாதான...

சந்திப்புகளை நடத்தி 16 மாதங்கள் கடந்துள்ளன.

இந்த நிலையில் நோர்வே அந்த இரண்டு தரப்பினரையும் மீண்டும் பேச்சுவார்த்தை மேசைக்கு கொண்டு வர முயற்சிக்கிறது

அந்த முயற்சியில் நோர்வே நாட்டுக்கு குறிப்பிட்டளவு நம்பிக்கையும் இருக்கிறது என தெரிவித்த ஹெல்கேசன் வன்முறைகள் நிறுத்தப்படாவிட்டால், சமாதான முனைப்புகளை முன்னெடுத்து செல்வதற்கான வாய்ப்புகள் இல்லையென்பதை வலியுறுத்தியுள்ளார்

சமாதானத்துக்கும் வன்முறைக்கும் இடையில் இருந்து கொண்டு இணக்கம் ஒன்றை எட்ட முடியாது என்பதை இரண்டு தரப்பும் உணர வேண்டுமென அவர் கருத்துரைத்துள்ளார்.

இதேவேளை விதார் ஹெல்கேசன் இன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார். (32)

### வெலிக்கடை...

இன்று தமிழ்மக்கள் அனைவரும் இத்தினத்தை பூரண துக்கதினமாக அனுஷ்டித்து கேளிக்கை நிகழ்வுகளைத் தவிர்த்து கறுப்புக் கொடிகளை பறக்கவிட்டு மண்ணிற்காகவும் மக்களிற்காகவும், வெஞ்சிறையில் உயிர்நீத்த உடன்பிறப்புக்களை நெஞ்சில் நிறுத்தி அந்நாளை துக்க தினமாக அனைவரும் அனுஷ்டிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்டுள்ளது. (32)

### இருதரப்புக்...

ளர்களை சந்தித்த அவர்,போர் நிறுத்தம் சில வேளைகளில் மீறப்படுகிறது.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் தலைமையகத்துக்கு தாம் அறிக்கையை சமர்ப்பிப்பதை வழக்கமாக செய்து வருவதாகத் தெரிவித்தார்.

போர் நிறுத்த மீறல் தொடர்பாக முரண்பாடுகளை வளர்த்துக் கொண்டால் போர் நிறுத்த உடன்பாட்டை உரிய முறையில் கடைப்பிடிக்க முடியாமல் போய் விடும் எனவும் சிசிர விஜயசூரிய கூறினார்

இதேவேளை புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் வவுனியாவில் இருந்து 1414 பொலிசார் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இதனால் சிவில்நிர்வாகத்தை வவுனியாவில் சரியாக நடைமுறைப்படுத்த முடியாமல் உள்ளதெனவும் அவர் கூறினார். (10,32)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு யூலை மாதம்25ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.